விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 17 புதன்கிழமை (01.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 195

## கொரோனாவின் இரண்டாம் அலையால் நாட்டில் ஆபத்து ஏற்படும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொடர்ந்து எச்சரிக்கை

(கொழும்பு)
நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் இரண்டாவது அலை ஏற்படும் ஆபத்து உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மீண்டும் எச்

23

## சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்துக

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் கவனயீர்ப்பு

(வவுனியா)
இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்திடம் பாரப்படுத்து மாறு கோரி, வவுனியா பழைய




23

## சுண்டிக்குளியில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்.சுண்டிக்குளிப் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 3.30 மணியளவில்

23

## புலிகளை மீள உருவாக்க முயற்சி

# சிறுவன் உட்பட 22 பேர் கிளிநொச்சியில் கைது

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கிளிநொச்சி)
**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து கிளிநொச்சியில் கடந்த மாதம் சிறுவன் உட்பட 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**

இந்த குற்றச்சாட்டின் கீழ் கடநத வாரம் மட்டும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு மாதம் முழுவதுமாக 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக உறவுகளால் முறையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 22 பேரில் ஒருவர் 17 வயதுச் சிறுவன் எனப் பெற்றோரால் பிறப்புச் சான்றிதழ் ஆதாரத்துடன் முறையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர்கள் தொடர்பில் இதுவரை எந்தவொரு நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.(மு-3)

தரம் 5
மாணவர்களுக்கான
புலமைப்பரிசில்
மற்றும்
க.பொ.த (சா/த)
மாணவர்களுக்கான
தகவல் தொடர்பாடல்
தொழில்நுட்பவியல்
வினாத்தாள்கள்
உள்ளே

## கொரோனா 2047

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 08 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில்

23

## ஆயிரம் கோடி ரூபாய் தேர்தலுக்கு செலவாகும்

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)
இம்முறை பொதுத் தேர்தலுக்கு சுமார் ஆயிரம் கோடி ரூபாய் செல

23

## கொரோனாவைத் தொடர்ந்து புதிய வகையான வைரஸ் சீனாவில் பரவுகின்றது

(பீஜிங்)
கொரோனா வைரஸை தொடர்ந்து புதிய வகையான வைரஸ் காய்ச்சல் சீனாவில் பரவத் தொடங்கியுள்ளது.

பன்றிக் காய்ச்சலுக்கு சமமான அறிகுறிகளுடன் புதிய வகை

23

## இலங்கையின் செயற்பாடு குறித்து ஐ.நா ஆணையாளர் அதிருப்தி வெளியீடு

(ஜெனிவா)
இலங்கையின் செயற்பாடு குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணை

23

## முகக்கவசமின்றி நடமாடிய 2658 பேர் தனிமைப்படுத்தலில்

17ஆம் பக்கம் பார்க்க

## போத்தீஸ் உரிமையாளர் கொரோனாவுக்குப் பலி

(சென்னை)
கொடிய கொரோனா வைரஸ் காரணமாக சென்னையில் போத்தீஸ் பட்டுப்புடவை கடை உரிமையாளர் மரணமடைந் துள்ளார்.

உலககெங்கிலும் கொரோனாவுக்கு பல இலட்சம் பேர் உயிரிழந்துவரும்

23

நாடாளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

6
க.வி.விக்னேஸ்வரன்

10
தவச்செல்வம் சிற்பரன்
X
நீதியின் கரங்களுக்கு நேர்மையான பக்கபலம்
(C-013)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி

இளைஞர்களின் எதிர்கால நம்பிக்கைக்கான தெரிவு...



4

X

V. K. விக்னேஸ்



X

ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி – ஈ.பி.டி.பி (E.P.D.P)

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை" என்கின்ற கூற்றுக்கமைய நல்லறிவுடனும், சிறந்த தலைமைத்துவ பண்புகளுடனும் IIS கல்வி நிறுவனத்தை ஸ்தாபித்து அதனூடாக சிறந்த தொழில்நுட்ப கற்கை நெறிகளை வட மாகாண இளைஞர், யுவதிகளுக்கு வழங்கிய எங்கள் ஆசிரியர் திரு.விக்னேஸ் குலரட்ணம் அவர்கள் தனது அடுத்தகட்ட நகர்வாக எம் பிரதேச அபிவிருத்தியை கருத்திற்கொண்டு அரசியல் பிரவேசத்தை செய்துள்ளார்.


எங்கள் எதிர்காலத்தை வளமுடையதாக்க உறுதுணையாக நின்ற எம் ஆசான் மீது IIS சமூகமாகிய நாம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து அவர்களை பாராளுமன்றம் அனுப்ப வழிசெய்வோம்.

அவரை பாராளுமன்றம் அனுப்புவதன் மூலம் தற்போது வீழ்ச்சி அடைந்து காணப்படும் வடமாகாணத்தின் கல்வி மட்டத்தை முன்னேற்றகரமானதாக மாற்றுவோம்.

-IIS மாணவ சமூகம்-

(C-011)


## 41 ஆம் நினைவு நாள்



மண்ணில்
12 - 03 - 2000

விண்ணில்
23 - 05 - 2020

அமரர்

### பிரதீப்குமார் வளர்ஷிகன்

01ம் வட்டாரம் கைவேலி புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரதீப்குமார் வளர்ஷிகன் என்பவரின் 41வது நினைவு நாள், நாளை (02.07.2020) வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரையும் . இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(3155)

கைவேலி,
புதுக்குடியிருப்பு

குடும்பத்தினர்.
தொ. இல - 077 258 2246

## 45ம் நாள் நினைவஞ்சலி



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
கடந்த 19.05.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் தெய்வம்

அமரர்

### தவராசா இராசேஸ்வரி
### (சுசியம்மா)

மலர்வு
28.03.1955

உதிர்வு
19.05.2020

குல விளக்கணைந்ததம்மா
குடும்பத்துடன் கூடிக்குலாவிய–நீ
எங்கே அம்மா!
வாடி வருந்துகின்றோம் வருவாயோ அம்மா
நாடி நரம்பிலெல்லாம் உன் உதிரம் தானம்மா
நாவடைத்து போய்விட்டோம் வாருமம்மா
பாலூட்டிச் சீராட்டி தாலாட்டி வளர்த்த
எமைப் பரிதவிக்க விட்டதேனம்மா!
மண்ணுலகில் வாழ்வதனை வெறுத்து விட்டு

விண்ணுலகில் இடம்தேடி விரைந்தாயோ அம்மா
ஊருக்கு அன்னமிட்ட உன் கரம் மறவோம் அம்மா
ஊருக்கெல்லாம் பசி தீர்த்த உன் முகத்தை யார் மறப்பார்
கண்ணீரால் நனைகின்றோம்
கவலையில் தவிக்கின்றோம்
எம் துயர் துடைக்க வருவாயோ
மூவேழு ஜென்மங்கள் சென்றாலும்
உன் நினைவை நாம் மறவோமம்மா

அன்னாரின் அஸ்தி நாளை (02.07.2020) வியாழக்கிழமை காலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தத்தில் கரைக்கப்படும். அந்நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து அவர்களின் இல்லத்தில் நடைபெறும் 45 ஆம் நாள் சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(3158)

குண்டுவர்காடு ஒழுங்கை,
மதவடி, வல்வெட்டித்துறை.

தொடர்புக்கு: சி.தவராசா (மனோ)
0094 774198797

தகவல்: குடும்பத்தினர்


# கருணா ஆட்டுக்குட்டியல்ல ஆபத்தான புலி

# அவரை தேர்தலில் போட்டியிட அனுமதியாதீர்

## தேர்தல்கள் ஆணையாளரிடம் ஓமல்பே சோபித தேரர் வேண்டுகோள்

**(கொழும்பு)**

**கருணா இலங்கை சட்டங்களை மீறியுள்ளதால் அவரை தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக்கூடாது என ஓமல்பே சோபித தேரர் தேர்தல்கள் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளார்.**



நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த செய்தியாளர்களிடம் பேசியபோது இதனை தெரிவித்தார்.

ஓமல்பே சோபித தேரர் மேலும் தெரிவிக்கையில்,

"விநாயகமூர்த்தி முரளிதரன் அல்லது கருணா கிழக்கு மாகாணத்தின் ஆயுதப்படைத் தலைவராக அவர் செய்த குற்றங்களை குறிப்பிட்டார். யுத்தம் சுமார் மூவாயிரம் படையினரைக் கொன்றதாக அவர் அறிவித்தார்.

கருணா அளித்த இந்த அறிக்கைகள் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மீறுகின்றன. மேலும், பாராளுமன்ற சட்டத்தின் 81ஆவது பிரிவு மீறப்பட்டுள்ளது. இந்த முறையில் சட்டவிரோதமாக நடந்து கொண்ட ஒருவர் பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

ஒரு கொலைகாரர் அல்லது ஒரு பயங்கரவாதி இதுபோன்ற குற்றங்களைச் செய்து, அதை பகிரங்கமாக அறிவித்து விட்டு தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக்கூடாது. அவர் கடுமையான குற்றம் செய்துள்ளதால் அவர் உடனடியாக தேர்தலில் இருந்து நீக்கப்பட வேண்டும். இது தொடர்பாக தேர்தல் ஆணையத் தலைவரிடமிருந்து எழுத்து பூர்வ கோரிக்கை விடுத்தோம்.

தமிழ் மக்களின் அரசியல் தலைமை பல்வேறு வகைகளில் உள்ளது. சம்பந்தன், விக்னேஸ்வரன் ஆகியோர் தங்கள் அரசியல் கருத்துக்களை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துகிறார்கள். கூட்டாட்சி மற்றும் தமிழ் மக்களுக்கு தனி ஆட்சி என்று அவர்கள் கோருகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு போதும் எங்களைக் கொலை செய்வதாக அறிவிக்கவில்லை.

கருணா கடந்த காலங்களில் செய்த தவறுகளை அறிந்து தனது தவறுகளைப் புரிந்து கொண்டு எதிர்காலத்தில் இது போன்ற குற்றங்களைச் செய்யக்கூடாது என்ற ஜனநாயகப் பாதையில் வந்துள்ளார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அரசியலில் நுழைந்துள்ளார்.

அதன்படி, அவர் அரசியல் கட்சிகளின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். கருணா அரசாங்கத்தை ஏமாற்றுவதற்காகவும் அதன் பயங்கரவாத இலக்குகளை நிறைவேற்றுவதற்காகவும் இந்த ஜனநாயக நீரோட்டத்திற்குள் நுழைந்ததாக பொய் சொன்னார்.

எனவே இந்த அறிக்கையுடன், கருணா ஒரு ஆட்டுக்குட்டியல்ல, ஆபத்தான புலி என்பது தெளிவாகியது.

கருணாவுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. மன்னிப்பு வழங்கப்பட்டபோது தெற்கில் உள்ள மற்ற அரசியல் கட்சிகளிடமிருந்து எந்த எதிர்ப்பும் இல்லை. அவர்களின் மறுவாழ்வை நாங்கள் ஏற்றுக்கொண்டு சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைந்தோம். ஆனால் அவர் பயங்கரவாதத்தில் பெருமைப்படுவார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

பயங்கரவாதத்தை அவர் முன்னிறுத்தி மீண்டும் தேர்தலை சந்திக்கிறார். இதுபோன்ற கொலைகார பயங்கரவாதிகளை எங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பலாமா? என்பதை நாம் முடிவு எடுக்க வேண்டும் என ஓமல்பே சோபித தேரர் மேலும் தெரிவித்தார். (2-4)





# கூட்டமைப்பு 20 ஆசனங்களைப் பெறும் என்பது பகல் கனவே

## சிவாஜிலிங்கம் காட்டம்

(யாழ்ப்பாணம்)

தொடர்ந்தும் ஏமாற்றி வருவதால் தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் கூட்டமைப்பை வெற்றிபெற வைக்க மாட்டார்கள் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நடைபெறப்போகும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றை இலக்க ஆசனங்களையே கைப்பற்றும்.

ஏனெனில் தமிழ் மக்கள் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கிய ஆணையினை வீணடித்து விட்டார்கள். 18 ஆசனங்களை வழங்கியும் அந்தச் சந்தர்ப்பத்தினை கூட்டமைப்பே வீணடித்தது.

இரண்டு பேரினவாதக் கட்சிகள் இணைந்து ஏற்படுத்திய அரசாங்கத்திற்கு ஆதரவளித்த கூட்டமைப்பு தமிழர்களுக்காகச் செய்தவற்றை அவர்களால் முடிந்தால் கூறட்டும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் நம்பிக்கைப் பிரேரணைக்கு ஆதரவளித்து அரசாங்கத்தினைக் கைப்பற்றிய கூட்டமைப்பு அரசியல் கைதிகள் விடுதலையைக் கூட பெற்றுத்தர முடியாது போனது.

கூட்டமைப்பு இம்முறை 20 ஆசனங்களைப்பெறமுடியுமென பகல் கனவு காண வேண்டாம். அவர்களது அனைத்து ஏமாற்று வேலைகளுக்கும் ஓகஸ்ட் மாதம் பதில் கிடைத்துவிடும்.

கூட்டமைப்பினது உறுப்பினர்கள் தங்களை வளர்த்துக் கொள்ளவே அரசுடன் இணைந்து அரசியல் செய்கின்றனர் என்று மக்களுக்குத் தெரியும் என எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (2-4-8)

# தாம் சுகபோக வாழ்க்கை வாழ்ந்ததைவிட தமிழ் மக்களுக்கு எதைச் செய்தார்கள்


## சம்பந்தனிடம் கேட்கிறார் சங்கரி

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தினரதும், புலனாய்வாளர்களினதும் தீவிர கண்காணிப்பு இருப்பதால், நீதியான தேர்தல் நடைபெறுமா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஊடகங்களுக்கு கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

இது முற்றிலும் உண்மையான வரவேற்கத்தக்க கருத்து. நாமும் அதே கருத்தைத் தான் கொண்டிருக்கின்றோம். ஆனால் இதனை சம்பந்தன் கூறுவதற்கு தகுதியுள்ளவரா? எனக் கேள்வி எழுப்புகிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி. அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அறிக்கையில், 2004ஆம் ஆண்டு இதேபோன்ற, ஒரு சூழ்நிலையில் தான் தேர்தல் நடந்தது. அனைத்து தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் வடகிழக்கில் நீதியான, நேர்மையான தேர்தல் நடைபெறவில்லை என்றும், மறு வாக்குப்பதிவு நடத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தன.



ஆனால் அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. உண்மையான ஜனநாயகத்தை மதிக்கின்ற ஒரு தலைவராக சம்பந்தன் இருந்திருப்பாரேயானால், ஜனநாயகத்துக்கு விரோதமாக தாங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றோம், சர்வதேச கண்காணிப்பு குழுக்களும் அதனையே உறுதிப்படுத்துகின்றன.

எனவே பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை ஏற்கமாட்டோம் என ஒரு தீர்க்கமான முடிவெடுத்திருந்தால், இன்று சம்பந்தனின் கருத்துக்கு இலங்கை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் செவிமடுக்கும். ஆனால் சம்பந்தன் 2004ஆம் ஆண்டே ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்தவராவார்.

யுத்தம் முடிந்தபின் நடந்த, இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களிலும், வெற்றி பெற்று, பாராளுமன்றம் சென்ற அவர் வடக்கு, கிழக்கில் படை குறைப்பு இடம்பெற வேண்டும், படையினரின் வசமுள்ள சகல காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும், இதை அரசு நடைமுறைப்படுத்தாவிடின் அதன் விபரீதங்கள் எப்படி இருக்குமென்று நாம் சொல்லத்தேவையில்லை என்று இப்போது தேர்தலுக்கான வீராப்பு வசனங்களை பேசுவதைப்போல், அந்த பாராளுமன்ற அமர்வுகளில் தான் ஒட்டி உறவாடிய அரசாங்கத்தைப் பார்த்து ஏன் கேட்கவில்லை?

நல்லாட்சியில் சம்பந்தன் என்ன செய்து கொண்டிருந்தார்? அரசியல் கைதிகளின் விடுதலை, படை குறைப்பு, படையினரின் வசமுள்ள தமிழ் மக்களின் காணி இவைகளை பற்றி ஏன் பேசவில்லை? எனக்கு தெரிந்து பேசிய ஒரே பேரத்தால், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் சொகுசான வீடுகள் கட்டி, பல காணிகளுக்கு சொந்தக்காரர்களாக மாறி விட்டார்கள்.

தமிழ் மக்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டார்கள். இந்தத் தேர்தலில் சம்பந்தன் குழுவினரின் தேர்தலுக்கான கபட நாடகத்தை தமிழ் மக்கள் அரங்கேற்ற விடமாட்டார்கள் என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவில் மாவட்டங்களுக்கிடையே வேறுபாடு

## மக்கள் சக்தி வேட்பாளர் உமா சந்திரபிரகாஷ்



(யாழ்ப்பாணம்)

சிறுநீரக நோயாளிகளிற்கு வழங்கப்படும் கொடுப்பனவில் வடக்கு மாவட்டங்களுக்கிடையே பெரும் வித்தியாசம் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட வேட்பாளர் உமா சந்திரபிரகாஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தின் பின்னர் குறிப்பிடத்தக்களவானவர்கள் சிறுநீரக மற்றும் இருதய புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் சிறுநீரக நோயாளிகளிற்கு, மாதாந்தம் ஆயிரம் ரூபா உதவித் தொகை கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அது முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் 5 ஆயிரம் ரூபாவாக வழங்கப்படுகிறது.

அதை நான் உறுதி செய்தேன். யாழ்ப்பாணத்தில் ஆயிரம் ரூபாவே வழங்கப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து 5 ஆயிரம் ரூபாவும், மாகாண அமைச்சிடமிருந்து ஆயிரம் ரூபாவும் மாதாந்தம் நோயாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

இந்த நடைமுறை மக்களை ஒழுங்கான முறையில் சென்று சேர்ந்துள்ளதா? முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் நோயாளர்கள் மத்திய, மாகாண அரசுகளின் கொடுப்பனவைப் பெற தகுதியுடையவர்கள் என சொல்கிறார்கள்.

அப்படியானால், கிளிநொச்சி, யாழ்ப்பாண நோயாளர்கள் ஏன் புறக்கணிக்கப்படுகிறார்கள்? இது தொடர்பாக இரண்டு மாவட்ட அரசாங்க அதிபர்களுடனும் தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால் முடியவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் உமா சந்திரபிரகாஷ் தெரிவித்துள்ளார். (2-8)

## தேர்தல் வியூகம்

# கட்சியை தாக்குவதை விடுத்து தங்களது கொள்கைகளை விளக்குவதில் நேரத்தை செலவழித்தால் ஆசனங்களைப் பெறலாம்

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் தபேந்திரன்

(யாழ்ப்பாணம்)

கட்சியை தாக்குவதை விடுத்து, தங்களது கொள்கைகளை விளக்குவதில் நேரத்தை செலவழித்தால் ஆசனங்களைப் பெறக்கூடியதாகவிருக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.-கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் வேதநாயகம் தபேந்திரன் தெரிவித்தார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



யாழ்.தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 19 கட்சிகளும், 14 சுயேட்சைக் குழுக்களும் பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றன. விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் எமது கட்சிக்கு பலமான வாக்கு வங்கி ஒன்று இருக்கிறது. போட்டியாக எதிரில் நிற்கும் கட்சிகள் எதிர்க்கட்சிகளை விமர்சிப்பதை விடுத்து தாங்கள் என்ன செய்யப்போகிறோம்என்பதை வெளிப்படுத்தினால் நிச்சயமாக வாக்காளர்களின் நம்பிக்கையைப் பெறலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.-கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் வேதநாயகம் தபேந்திரன் தெரிவித்தார். (2-8)

## இராசிபலன்

01.07.2020
ஆனி 17, புதன்கிழமை
ஏகாதசி பிற்பகல் 5.20 மணிவரை
விசாகம் பின்னிரவு 2.48 மணிவரை
சுபநேரம் 4.26-5.56 மணிவரை
இராகுகாலம் 11.56-1.26 மணிவரை
சந்திராஷ்டமம்- அச்சுவினி
சயன ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

வளவன்

**மேஷம்** — மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வேலைச்சுமை கூடும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** — பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**மிதுனம்** — உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, வீட்டுப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** — நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்** — வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வாகன சுகமுண்டு.

**கன்னி** — செய்தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** — புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சேமிப்பு உயரும் நாள்.

**விருச்சிகம்** — வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு** — கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சஞ்சலங்கள் கூடும்.

**மகரம்** — வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், வெளியூர்ப் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** — வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், என்றோ நடக்கவிருந்த காரியம் நல்லவிதமாக அமையும், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முற்படுவர்.

**மீனம்** — திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும்.

# ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்புடன் தொடர்புடைய

# 125 பயங்கரவாதிகள் இலங்கையில் இருக்கிறார்கள்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இரகசிய கடிதம் கிடைத்ததாக சாட்சியம்

(கொழும்பு)

**ஐ.எஸ்.ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய 125 பேர் இலங்கையில் இருக்கிறார்கள். ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு சிறப்புப் பாதுகாப்பு பிரிவு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இரகசிய கடிதம் கிடைத்தது.**

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னிலையாகியிருந்த பாதுகாப்பு பிரிவில் பணியாற்றிய உதவி பொலிஸ் அத்தியட்சர் எஸ்.ஜி.சதரசிங்கவே இவ்வாறு சாட்சியமளித்துள்ளார்.

“முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலத்தில் அரச உளவுச் சேவை பணிப்பாளராக செயற்பட்ட நிலந்த ஜயவர்தன கடந்த 2019 ஏப்ரல் 10 ஆம் திகதி மட்டக்களப்பு பகுதியில் பாதுகாப்பு மதிப்பீட்டைக்கூறி ஒரு இரகசிய கடிதத்தை அனுப்பியிருந்தார்.

குறித்த இரகசியக் கடிதத்தில் இதுவரை ஜனாதிபதிக்கு தெளிவான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் ஐ.எஸ்.அமைப்பினை பின்பற்றுபவர்கள் அந்த பகுதிக்குள் இருப்பதால் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அந்த இரகசிய கடிதத்தில், அரச உளவுச் சேவை பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன தெரிவித்திருந்தார்.

எனவே, தீவிரவாத நடவடிக்கைகளை முன்னெடுக்க இப்பகுதியில் வாய்ப்புக்கள் உள்ளதால் பாதுகாப்பை பலப்படுத்த அவர் வலியுறுத்தி இருந்தார்.

இதேவேளை சுதந்திர தினத்திற்கு முந்தைய தினம் இடம்பெற்ற மதிப்பீட்டுக் கூட்டத்திற்காக, அரச உளவுச் சேவையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் லலித்நாணயக்கார வந்திருந்தார்.

அதன்போது இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்புடன் 125 பேர் இணைந்திருப்பதாகவும் அவர்களில் இருவர் ஏற்கனவே வெல்லம்பிட்டி மற்றும் தெஹிவளை ஆகிய இடங்களில் வசித்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

மேலும் ஈராக் மற்றும் ஈரானில் ஐ.எஸ்.ஐ.எஸ்.தோல்வியடைந்த பின்னர் அவர்கள் ஏனைய நாடுகளைத் தாக்க திட்டமிட்டுள்ளார்கள் என லலித் நாணயக்காரா குறிப்பிட்டிருந்தார் என உதவி பொலிஸ் அத்தியட்சர் எஸ்.ஜி.சதரசிங்க, ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தார். (2-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

பாராளுமன்றத் தேர்தல்-2020



எமது புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலயத்தின்
புகழ்பூத்த பழைய மாணவர்களில் ஒருவர்
பாடசாலையின் அபிவிருத்திக்கு கைகொடுப்பவர்
வேதநாயகம் தபேந்திரன்
B.Com, PGD.PDS,M.A
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 9
(006)
பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற பாடசாலை சமூகம்
யாவரும் கைகொடுப்போம்.
பழைய மாணவ நண்பர்கள், யா/புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலயம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நன்னடத்தை அதிகாரி ப.சிவஞானவேல்
அவர்களின் பாசமிகு தந்தை
அமரர். இராசையா பத்மலிங்கம்
(முன்னாள் இ.போ.ச. நடத்துனர்)

மண்ணில் 09.02.1941
விண்ணில் 28.06.2020

சோகத்தின் சுமையதனை சுமக்கின்றோம் இதயமதில்
பரிதவித்து வாடுகின்றோம் நேசத்தை மறந்து
ஏன் நெடுந்தூரம் சென்றீர்களே!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆழ்ந்த துயரத்துடன்
நன்னடத்தை அதிகாரிகள் சங்கம், வடமாகாணம்

(C-9800)



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் 19 ஆம் நாள் திருவிழா நேற்று திங்கட்கிழமை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றது.

# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 24,829 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி

## யாழ்.மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 24 ஆயிரத்து 829 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவர் கி.அமல்ராஜ் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்காக தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்த தபால் வாக்காளர்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை பொதியிடும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட அஞ்சல் வாக்காளர்களுக்கான வாக்குச்சீட்டு பொதியிடும் பணி நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் காலை ஆரம்பமாகியதாக யாழ்.மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவர் கி.அமல்ராஜ் தெரிவித்தார்.

தபால்மூல வாக்குச் சீட்டு பொதியிடும் பணி தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 21 ஆயிரத்து 239 தபால்மூல வாக்காளர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பொதியிடும் பணி நடைபெற்று வருகின்றது.

அதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தில் 3,590 ஏற்றுக் கொள்ளப்பட்ட வாக்காளர்களுக்கான பொதியிடும் பணிகள் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்று வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 22 நிலையங்களில் பொதியிடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு பொதியிடப்பட்ட ஆவணங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பப்படும். அவர்கள் மேலதிக நடவடிக்கையினை மேற்கொள்வர்.

எதிர்வரும் 13 ஆம் திகதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான தபால்மூலம் வாக்களிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 14,15 ஆம் திகதிகளில் ஏனைய அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான தபால் வாக்களிப்பு இடம்பெறும். 16,17 ஆம் திகதிகளில் மாவட்ட செயலகம் முப்படையினர் பொலிஸாருக் கான தபால் மூல வாக்களிப்பு இடம்பெறும் எனவும் தெரிவித்தார்.

தபால்மூல வாக்குச் சீட்டு பொதியிடல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன்,

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்த தபால் வாக்காளர்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை பொதியிடும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகி நாளையும் இடம்பெறவுள்ளதாக தெரிவித்தார். (4-5)

# விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான தரவட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

தெரிவு செய்யப்பட்ட தரம் 10, 11 வகுப்பு விஞ்ஞானபாட ஆசிரியர்களுக்கான தரவட்டம் நாளை 2 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வருகைதரும் ஆசிரியர்கள் 2019 தரம் 10 இற்கான விஞ்ஞான பாட பகுப்பாய்வினையும் தற்போது அவர்களது முன்னேற்றத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையையும் தங்களது உறுதிப்படுத்தலுடன் எடுத்துவருமாறு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (4-5)

# கடற்கரையில் குப்பை கொட்டுவதை தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடி கரையோரப் பகுதியில் கழிவுப் பொருட்கள் மற்றும் பொலித்தீன் கலந்த குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது.

இவ்விடத்தில் கொட்டப்படுகின்ற குப்பைகள் கடும் காற்று காரணமாக மக்கள் குடியிருப்புகளுக்கு வந்து சேருகின்றன. அதுமட்டுமல்லாது துர்நாற்றமும் நுளம்புத் தொல்லையும் அதிகரித்து காணப்படுகிறது.



இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். வேறுபகுதிகளில் வசிப்பவர்களும் இரவு வேளைகளில் கழிவுப் பொருட்களை கொட்டி விட்டு செல்வதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

பலதடவைகள் நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் தொடர்ந்தும் குப்பை கொட்டப்படுகிறது. இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (4-5-100)

# கலை இலக்கிய போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2020 ஆம் ஆண்டு கலை இலக்கிய போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடல் நயத்தல், கவிதைபாடல், இலக்கிய விவரணம் ஆகிய துறையில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

எனவே இப்போட்டி தொடர்பான விண்ணப்பப்படிவத்தினையும் சுற்றுநிருபத்தினையும் கலாசாரப்பிரிவில் பெற்று தமது ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு தெல்லிப்பழைபிரதேசசெயலாளர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார். (5)

# கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் வழங்கப்படுகின்ற கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாடகம், எழுத்தாளர்கள், நடனம், ஓவியம், சிற்பம், இசை, கிராமியக் கலை, திரைப்படக் கலை, தற்காப்புக் கலை மற்றும் ஏனைய கலைத்துறைகளில் சிறந்த சேவையாற்றி அறுபது வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.

எனவே தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவைச் சார்ந்த மேற்குறிப்பிட்ட துறைகளில் சேவையாற்றிய கலைஞர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (5)

# பொதுத்தேர்தலுக்கு முன்னர் எம்.சி.சியை கிழித்தெறிய முடியுமா?

## அகிலவிராஜ் கேள்வி

(கொழும்பு)

அமெரிக்காவுடனான மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திடப் போவதில்லை என அரசாங்கத்தினால் திட்டவட்டமாக அறிவிக்க முடியுமா என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் கேள்வியெழுப்பியுள்ளார்.

பொதுத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பிரசார நிகழ்வொன்றில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார். இந்த உடன்படிக்கை முற்றுலும் தீங்கானது கிடையாது என்று கூறிவருகிறார்கள். நான் இந்த ஆட்சியாளர்களுக்கு சவால் விடுக்கிறேன்.

முடிந்தால், எம்.சி.சி. உடன்படிக்கையை செய்து கொள்ளப் போவதில்லை என்று கூறமுடியுமா? பொதுத் தேர்தலுக்கு முன்னர் இந்த உடன்படிக்கையைக் கிழித்தெறிய முடியுமா?

எமது அரசாங்கம் இதுதொடர்பாக ஆராய்ந்ததே ஒழிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கைச்சாத்திடவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# ஏககுண்ட கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்காபுரம் ஸ்ரீ ஞான துர்க்கை அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மிகவும் சுருக்கமாக ஏககுண்ட பக்ஷ அஷ்டபந்தன சம்புரோகஷ்ண கும்பாபிஷேகமாக நாளை 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.15 மணி முதல் 10.15 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும்.

கடந்த மார்ச் மாதம் நடைபெறவிருந்த கும்பாபிஷேகம் நாட்டு நிலைமை காரணமாக நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5)



வடமராட்சி கமநல திணைக்கள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் 40 பயனாளர்களுக்கு 560 தென்னங்கன்றுகள் கரணவாய் கமநலத் திணைக்களத்தில் நேற்று வழங்கப்பட்டன. (கரணவாய் செய்தியாளர்)

## மாணவர் தெரிவு செய்து விடையளிக்கும் வகையில் அதிக வினாக்களை உள்ளடக்குங்கள்

### கல்வி அமைச்சுக்கு ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

இரண்டு நேரசூசியில் 500 மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைக்கமைய இதற்கான அனுமதியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியுள்ளார்.

பிரத்தியேக வகுப்புகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து தொழில்சார் விரிவுரையாளர்கள் சங்கத்தினர் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர்.

கல்விப் பொதுத்தராதர உயர்தர மற்றும் சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களும் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களும் சுமார் 5 மாதங்களாக கல்வி நடவடிக்கையில் ஈடுபடவில்லை என இதன்போது தொழில்சார் விரிவுரையாளர்கள் சங்கத்தினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

இதனை கருத்திற்கொண்டு குறித்த பரீட்சை தினங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு பரிசீலிக்குமாறு தொழில்சார் விரிவுரையாளர்கள் சங்கத்தினர் ஜனாதிபதியை கேட்டுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து பரீட்சை தினங்கள் குறித்த தீர்மானத்தை மீளவும் ஆராயுமாறு கல்வி அமைச்சருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனிடையே, வினாப்பத்திரங்களை தயாரிக்கும் போது மாணவர்கள் தெரிவுசெய்து விடையளிக்கும் வகையில் அதிக வினாக்களை உள்ளடக்குவது தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி பரீட்சைகள் ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (2-8)

## சுகாதார நடைமுறைகளை அலட்சியம் செய்ய வேண்டாம்

### பொதுமக்களுக்கு இராணுவத் தளபதி அறிவுறுத்தல்

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக கட்டாயப்படுத்தப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை அலட்சியம் செய்ய வேண்டாமென இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் சவேந்திர சில்வா மேலும் கூறியுள்ளதாவது, "வெளிநாடுகளில் இருந்து வருகை தருகின்றவர்கள் காரணமாகவே அவ்வப்போது, கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகின்றனர்.

எனினும் அவர்களை சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கவனித்துக் கொள்வது நமது கடமையாகும்.

மேலும் நாடு முழுவதிலும் உள்ள அனைத்து தனிமைப் படுத்தல் மையங்களிலும் உள்ளவர்களை, கண்காணித்து கொள்வதற்கு பெரும்பாலான இராணுவத்தினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் அனைத்து மக்களும் அன்றாட சுகாதார நடைமுறைகள் குறித்து நன்கு விழிப்புடன் இருக்க வேண்டும்.

மேலும் சமூகத்தின் நலன்களுக்காக சுகாதார அதிகாரிகளினால் முன்மொழியப்பட்டுள்ள கைகழுவுதல், சமூக இடைவெளி பேணுதல், முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியம்" என சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார். (2)

## மாலைதீவில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு

### உறுதியளித்தார் அப்துல் ரஷாக்



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் மாலைதீவு உயர்ஸ்தானிகர் ஓமர் அப்துல் ரசாக்கிற்கும் **(Omar Abdul Razzak)** இடையில் விசேட சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இந்த சந்திப்பு நேற்று முன்தினம் காலை அலரி மாளிகையில் இடம் பெற்றுள்ளது.

கொவிட் - 19 தொற்று பரவல் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த மாலைதீவு எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதி முடக்கல் நிலையிலிருந்து மீண்டும் திறக்கப்படவுள்ளது.

இந்நிலையில், மாலைதீவில் ஹோட்டல் துறையில் தொழிலில் ஈடுபடும் இலங்கை பணியாளர்கள் வழமையைப் போன்று தமது பணியில் ஈடுபட வாய்ப்பு கிடைக்கும் என உயர்ஸ்தானிகர் பிரதமரிடம் அறிவித்துள்ளார்.

மாலைதீவில் உள்ள இலங்கையர்களின் தகவல் தொடர்பில் உயர்ஸ்தானிகரிடம் பிரதமர் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சின் தகவலுக்கமைய இலங்கை பணியாளர்கள் 15000 - 20000க்கும் இடையிலானோர் மாலைதீவில் பணியாற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாலைதீவினை மீண்டும் திறப்பதற்கு அந்தநாட்டு அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர், அந்த நாட்டு சுற்றுலாத் துறை மீண்டும் வழமைக்கு திரும்பும் என மேலும் தெரிவித்துள்ளார். (2)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 42 ½ செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. நகைக்கடை ஊழியர்.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10880 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 18 செவ் 4 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்.<br>தொ.இ: G/10940 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: சூரி,செவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சொந்தக்கடை நடத்துகின்றார்.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10882 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 8 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர் உள்நாடு, வெளிநாடு.<br>தொ.இ: G/10943 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: செவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் க.பொ.த.உ.த தொழில் நுட்ப உத்தியோகத்தர். (தனியார்)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10883 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 44 செவ் 3 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி, அரச வங்கி முகாமையாளர்.<br>எதிர்பார்ப்பு: தனியார் வங்கி, அரச உத்தியோகம். பட்டதாரி விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/10946 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 45 ¼ செவ் 6 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.Sc, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம் பார்க்கும் பெண் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/10884 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/10949 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மலையக மக்கள் முன்னணியை பலப்படுத்த தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வோம்

## -இராதாகிருஷ்ணன்-

(நுவரெலியா)

மலையக மக்கள் முன்னணியை பலப்படுத்த முயற்சிக்கும் வேளை முட்டுக் கட்டைகள் வருகின்றன. அவற்றை கண்டுகொள்ள வேண்டாம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளருமான முன்னாள் அமைச்சர் கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பொதுத்தேர்தலின் பின்னர் மலையக மக்கள் முன்னணியை கைப்பற்றப் போவதாக அனுஷா சந்திரசேகரன் விடுத்துள்ள அறிவிப்புக்கு பதில் அளிக்கும் வகையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "மலையக மக்கள் முன்னணி இன்று இருக்கின்றதெனில் கட்சி ஆதரவாளர்களே அதற்கு பிரதான காரணம். தலைமைத்துவம் வழங்கவே என்னை அழைத்து வந்தனர். சந்திரசேகரனின் கொள்கைகள் சிறந்தவை.

நல்லது செய்யவேண்டும் என்பதற்காகவே நானும் வந்தேன். நான் எங்கிருந்தாலும் தலைவர்தான். அந்த கட்சியில் இருந்திருந்தாலும் தலைவராகவே இருந்திருப்பேன்.

மலையக மக்கள் முன்னணியை பலப்படுத்த முயற்சிக்கும் வேளை முட்டுக் கட்டைகள் வருகின்றன. அவற்றை கண்டுகொள்ள வேண்டாம். தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வது குறித்து நாம் கவனம் செலுத்துவோம்.

பொதுத்தேர்தலின் பின்னர் மலையக மக்கள் முன்னணியை மீட்கப்போவதாக அனுஷா கூளுரைத்துள்ளார். தேர்தல் முடியட்டும், அதனை பார்த்துக்கொள்வோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (5)

# ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு அரவிந்த டி சில்வா வாக்குமூலம்

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்காக இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வா மோசடிகள் குறித்து ஆராயும் குழுவில் முன்னிலையாகியுள்ளார். 2011 உலகக்கிண்ண போட்டி இடம்பெற்றபோது தேசிய தேர்வுக் குழுவின் தலைவராக இருந்த அரவிந்த டி சில்வாவிற்கு நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு விளையாட்டில் இடம்பெறும் மோசடிகள் குறித்து ஆராயும் குழுவில் ஆஜராக அழைப்பு விடுக்கப்பட்டது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 2011 உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றதாக கடந்த 18 ஆம் திகதி முன்னாள் விளையாட்டு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருந்தார்.

இந்த குற்றச்சாட்டு கிரிக்கெட் வீரர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இந்த குற்றச்சாட்டு தொடர்பாக கடந்த 24 ஆம் திகதி நாவலப்பிட்டியிலுள்ள அவரது அலுவலகத்தில் குறித்த குழு மகிந்தானந்த அளுத்கமகேவிடம் வாக்குமூலத்தை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-2)

# பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கேப்பாபிலவு இளைஞன் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராமத்தில் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணை பிரிவினரால் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கேப்பாபிலவு பகுதியினை சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே விசாரணைக்காக கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. கைது செய்யப்பட்டவரின் வீட்டிற்குச் சென்ற பயங்கரவாத குற்றத் தடுப்பு விசாரணைப்பிரிவினர் இவரை கைதுசெய்வதற்கான ஆவணத்தை வழங்கிவிட்டு கைது செய்து விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர். (4-5-281)

# ராஜித தாக்கல் செய்த மனு நீதிபதிகளால் நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தாக்கல் செய்த திருத்த மனுவை மேன் முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

குறித்த மனுவை ராஜித சேனாரட்னவின் சட்டத்தரணி மீளப் பெற்றுக் கொண்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அச்சல வெங்கலபுலி மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய நீதிபதிகள் குழுவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வெள்ளைவான் சம்பவம் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்து வெளியிட்டமைக்காக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணையை கொழும்பு மேல் நீதிமன்றம் இரத்து செய்ததை அடுத்து அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தன்னை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி ராஜித சேனாரட்னவினால் குறித்த திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# பொய்யான அரசியல் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்-சஜித்

(கொழும்பு)

மனிதாபிமானம் இல்லாது தொடர்ந்தும் செயற்படும் இந்த அரசாங்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க, மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மோதரையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "கொரோனா அச்சுறுத்தல் நிலவிவரும் காலத்தில் இந்த அரசாங்கம் மக்களுக்காக எந்த நிவாரணத்தை வழங்கியுள்ளது எனக் கேட்க விரும்புகிறேன்.

உலகிலேயே இன்று எரிபொருளின் விலை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் இலங்கையில் மட்டும் எரிபொருளின் விலையில் மாற்றங்கள் இல்லை.

இதுவா மக்கள் ஆட்சி? நாம் ஓகஸ்ட் 5 ஆம் திகதி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கத்தை ஸ்தாபித்து 24 மணிநேரத்தில் எரிபொருளின் விலையைக் குறைப்போம் என்பதை இவ்வேளையில் உறுதியுடன் கூறிக்கொள்கிறேன்.

5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு கூட மக்களுக்கு ஒழுங்காகச் சென்றடையவில்லை. இந்த அரசாங்கத்துக்கு மக்களின் துயரம் தெரியவில்லை. மனிதாபிமானமே இல்லாமல்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த பொய்யான அரசியல் கலாசாரத்துக்கு நாம் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து இந்த ஆட்சியை விரட்டியடிக்க வேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 3381பேர் தபால்மூல வாக்களிப்புக்குத் தகுதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுகள் அடங்கிய பொதி அஞ்சல் அலுவலகத்துக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நாட்டில் நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.


முக்கியமாக முறைப்பாட்டு பிரிவு மற்றும் களஞ்சிய பிரிவு உட்பட்ட ஆரம்பகட்ட குழுக்கள் தங்களுடைய பணிகளை ஆரம்பித்து இருக்கின்றது.

நேற்றையதினம் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வாக்குசீட்டு அடங்கிய பொதிகள் தபால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

அந்தவகையிலே 3508 பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்த நிலையில் 127 பேருடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு 3381 விண்ணப்பங்கள் அஞ்சல் வாக்காளர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் 78360 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் 136 நிலையங்களில் வாக்களிக்கவுள்ளனர்.

இதேவேளை மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையிலேயே இம்முறை முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் வாக்கு எண்ணும் பணிகள் நடைபெறவுள்ளன. (5-281)



**கடந்த வருடம் வழங்கப்பட்ட செயற்றிட்ட உதவியாளர்கள் நியமானம் தற்காலிகமாக கடந்த வருடம் நிறுத்தி வைக்கப்பட்டது. தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சினூடாக பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்களுக்கு வழங்கப்பட்ட நியமனங்கள் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. மீண்டும் நியமனங்கள் வழங்கப்படாத நிலையில் மன்னார் மாவட்டத்தில் நியமனம் பெற்ற செயற்றிட்ட உதவியாளர் அனைவரும் ஒன்றிணைந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சென்று ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜரை கையளித்தனர். (படம்: மன்னார் செய்தியாளர்)**

# உள்ளூராட்சி சபைகளின் பரிணாமம்

03


## கலாநிதி க.தவலிங்கம்

தவிசாளர் – எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




**1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராமக் குழுக்கள் கட்டளைச் சட்டத்தின் மூலம் கிராமங்களின் பொதுத் தேவைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கிராமக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இக்குழுக்கள் நீதிமன்றங்களாகவும் செயற்பட்டன.**

**பா**தைகள் அமைத்தல், மரக்குற்றிப் பாலங்கள் மற்றும் பாலங்கள் அமைத்தல், அவற்றைப் பராமரித்தல், பிள்ளைகளுக்கு கல்வியறிவு வழங்குதல், பண்ணை வளர்ப்பு, புற்றரைகளைப் பேணுதல், பழைமையான சம்பிரதாயங்களைச் செயற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் இவற்றுள் அடங்கின. குறித்த பிரதேசத்தில் உள்ள 10 பேர் அடங்கிய குழுவினரின் வேண்டுகோளின் பிரகாரம், ஒரு பொதுக்கூட்டத்தை நடத்த முடியுமென்பதோடு, அதற்காக கூட்டம் நடத்துவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்னர் கூட்டம் நடத்தப்படும் எனவும் மற்றும் இடம், திகதி, நேரம் ஆகியவற்றை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை பிரதேசம் முழுவதும் வெளியிடுதல் வேண்டும்.

இவ்வாறான கூட்டத்திற்குச் சமூகமளிக்கும் அப்பிரதேசத்தின் நிரந்தர வதிவாளர்களாகவும் 21 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் குறித்த கூட்டத்தினத்திற்கு முன்னரான 5 வருடத்தினுள் நீதிமன்றத்தினால் எதுவித தண்டனைகளுக்கும் ஆளாகாதவர்களாகவும் இருந்த அனைவருக்கும் வாக்களிப்பதற்கான உரிமை கிடைக்கப்பெற்றது.

எவ்வாறாயினும் 25 வயதினைப் பூர்த்தி செய்தவர்களாகவும் தனது பெயரிலோ அல்லது தனது மனைவியின் பெயரிலோ 200 ரூபாவிற்கு மேற்பட்ட சொத்துக்களை உடையவராகவும் அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படாதவராகவும் இருத்தல் வேண்டுமென்பது குறித்த கிராம சபைக்குத் தெரிவு செய்யப்படுபவர்களுக்குரிய தகைமைகளாகக் கருதப்பட்டன. தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று வருடங்களாகும்.

இந்தக் கிராம சபைகள் 5 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைந்திருந்ததோடு இது ஒரு நீதிமன்றமாகவும் செயற்பட்டது. இச்சபைக்கான தவிசாளரை ஆளுநர் நியமிப்பதுடன் ஏனைய அங்கத்தவர்கள் திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். இந்த முறையானது, ஜூரி சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யப்படும் முறையை ஒத்ததாக அமைந்திருந்தது.

ஒரு குற்றத்திற்கு தண்டனை வழங்கும் போது ஆகக்கூடிய அபராதமாக 20 ரூபா அறவிடப்பட்டது. 1884 ஆம் ஆண்டிலிருந்து கிராம சபைத் தவிசாளராகப் பதவி வகித்தவர் பெரும்பாலும் கம்முலாதேனி எனப்படும் பிரதான கிராமத் தலைவராக இருந்த போதும் இந்த நடைமுறை வெற்றிகரமானதாக அமையவில்லை.

### 1892 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுகாதாரம் பேனல் சபை கட்டளைச் சட்டம் (The Sanitary Boards Ordinance No. 18 of 1892)

சிறு நகரங்களில் மின்சாரம், வடிகால், பொது வசதிகள், சந்தைகள், பாற்பண்ணைகள், சலவை நிலையங்கள் மற்றும் நீர் வழங்கல் போன்ற பல பொதுச் சுகாதார சேவைகளை வழங்குவதற்காக இச்சட்டம் தயாரிக்கப்பட்டது.

அரசாங்க அதிபரின் தலைமையின் கீழ் இயங்கும் இச்சபைக்கு அரச வேலைத் திணைக்களத்தின் உறுப்பினர்களும் சுகாதாரத் திணைக்களத்தின் உறுப்பினர்களும் ஆளுநரால் நியமிக்கப்படும் உறுப்பினர்களும் உள்ளடங்கியிருந்தனர். 1928 ஆம் ஆண்டில் 110 கிராமங்களை உள்ளடக்கியதான 19 சுகாதாரம் பேணல் சபைகள் இயங்கியதாக டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிறு நகரங்களில் மின்சாரம், வடிகால், பொது வசதிகள், சந்தைகள், பாற்பண்ணைகள், சலவை நிலையங்கள் மற்றும் நீர் வழங்கல் போன்ற பல பொதுச் சுகாதார சேவைகளை வழங்குவதற்காக 1892 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுகாதாரம் பேணல் சபை கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது.**

### 1898 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உள்ளூர் சபைகள் கட்டளைச் சட்டம் (The Local Boards Ordinance No. 13 of 1898)

இச் சட்டத்தின் மூலம் பெரிய நகரங்களுக்கான உள்ளூர் சுகாதார மற்றும் சுகாதார சபைகள் (Local Health and Sanitation Boards) உருவாக்கப்பட்டன.

வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான உள்ளூர் சபைகள் நிறுவப்பட்டு இருந்ததுடன், இச்சபைகள் சுகாதாரம் பேணல் சபைகளை ஒத்ததாக இருந்ததோடு, அதே நடைமுறையிலான அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன.

இச்சபைகளின் உத்தியோகபூர்வ தவிசாளராக அரசாங்க அதிபர் கடமையாற்றியதுடன், உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்பட்டவர்களும் (3 உறுப்பினர்கள்), தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மூன்று உறுப்பினர் குழுவும் இதில் உள்ளடக்கப்பட்டு இருந்தது.

பொலிஸ் சேவையின் பராமரிப்புக்கென வரிகளை அறவிடும் அதிகாரம் உள்ளூர் சபைகளுக்கு இருந்தது. 1928 ஆம் ஆண்டில் மொத்தமாக 13 உள்ளூர் சபைகள் செயற்பட்டதாக அறிக்கைகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**1898 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உள்ளூர் சபைகள் கட்டளைச் சட்டத்தின் மூலம் பெரிய நகரங்களுக்கான உள்ளூர் சுகாதார மற்றும் சுகாதார சபைகள் உருவாக்கப்பட்டன. உத்தியோகபூர்வமான உறுப்பினர்கள் தவிர தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மூன்று உறுப்பினர் குழுவும் இதில் உள்ளடக்கப்பட்டு இருந்தனர்.**

### 1920 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டம் (The Local Government Ordinance No. 11 of 1920)

1920 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள் மாநகர சபைகள் அல்லாத ஏனைய பிரதேசங்களுக்கென "மாவட்ட சபை" எனப்படும் முறை ஆரம்பிக்கப்பட்டது. நகர மாவட்ட சபைகள் (Urban District Councils (UDC), பொது மாவட்ட சபைகள் (General Councils), கிராமிய மாவட்ட சபைகள் (Rural District Councils) என மூன்று வகையான மாவட்ட சபைகள் இச்சட்டத்தின் மூலம் நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இச்சபைகள் பொதுமக்களின் விருப்பத்தின் பிரகாரம் நிறுவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இந்த மாவட்ட சபைகளின் செயற்பாடுகள் பற்றித் தீர்மானிக்குமிடத்து, பிரதேசத்திலுள்ள மக்கள் தொகை, அபிவிருத்தியின் அளவு போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டன.

சுகாதாரம்பேணல்சபைகள், மாகாண அரச சபைகள் ஆகியவற்றினால் நிர்வகிக்கப்பட முடியாத ஏனைய பிரதேசங்களில் இந்த மாவட்ட சபைகள் நிறுவப்பட்டன. நகர சபைகள் ஊடாக முன்னேறி வரும் கிராமங்கள் நாகரிக மட்டத்தில் அபிவிருத்தி பெறும் கிராமங்கள் போன்றவற்றில் இந்த மாவட்ட சபைகள் நிறுவப்பட்டன.

காடுகள் நிறைந்த பிரதேசமாக விளங்கிய, சனத்தொகை குறைந்த, வர்த்தக நடவடிக்கைகள் குறைந்த, பரந்தளவிலான சுகாதாரம் பேணல் முறைகள் அவசியமற்றதெனக் கருதப்படுகின்ற, போக்குவரத்து வசதிகள் அவசியமற்றதெனக் கருதப்படுகின்ற முன்னேற்றமடையாத பிரதேசங்களிலேயே கிராம சபைகள் நிறுவப்பட்டன.

இச் சபைகளுக்கு உத்தியோகபூர்வ உறுப்பினர்கள் 4 பேரும், உத்தியோகப்பற்றற்ற 4 பேருமாக மொத்தம் 8 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த உறுப்பினர்களின் நியமனம் ஆளுநரால் மேற்கொள்ளப்பட்டது.

இதனைவிட இந்தச் சபைகள் மத்திய அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புகள், இடைக்காலச் சட்டங்களை அங்கீகரித்தல், மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்று ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விநியோகித்தல், நிறுவப்படவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக தனியானதொரு கட்டமைப்புச் சபை 1921.06.15 ஆம் திகதி நிறுவப்பட்டது.

இச்சபைகளுக்கு உத்தியோகபூர்வ உறுப்பினர்கள் 5 பேரும் உத்தியோகப்பற்றற்ற 4 பேரும் நியமிக்கப்பட்டனர். மக்களது விருப்பத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட இந்தச் சபைகள் எண்ணிக்கையின் அடிப்படையில் (1921-1931) பத்து வருட காலத்தினுள் பதினொரு நகர மாவட்ட சபைகள் மாத்திரமே நிறுவப்பட்டிருந்தன.

**1920 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் மூலம் மாநகர சபைகள் அல்லாத ஏனைய பிரதேசங்களுக்கென "மாவட்ட சபை" எனப்படும் முறை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நகர மாவட்ட சபைகள், பொது மாவட்ட சபைகள், கிராமிய மாவட்ட சபைகள் என மூன்று வகையான மாவட்ட சபைகள் நிறுவப்பட்டன.**

இந்த நிறுவனங்கள் தொடர்பாக பொதுமக்களின் நம்பிக்கை அற்றுப் போன காரணத்தினால், பொது அல்லது கிராமிய மட்டத்திலான மாவட்ட சபைகளை நிறுவுவதற்கு இயலாமற்போனது.

(தொடரும்...)

# பாரதம்

## ஒருபுறம் பேச்சுவார்த்தை–மறுபுறம் ஆயுதக்குவிப்பு

# கல்வான் பள்ளத்தாக்கில் சக்திவாய்ந்த பீரங்கிகளை நிறுத்தியது இந்தியா



(டில்லி)

லடாக் எல்லையில் சீனாவின் ஆக்ரோஷமான படைக்குவிப்பை தொடர்ந்து கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா சக்திவாய்ந்த டி-90 பீஷ்மா பீரங்கிகளை நிறுத்தியுள்ளது.

லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் கடந்த மாதம் 15 ஆம் திகதி ஊடுருவ முயன்ற சீன இராணுவ வீரர்களுக்கும், இந்திய வீரர்களுக்கும் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது.

இதில் இந்திய தரப்பில் 20 வீரர்கள் வீர மரணம் அடைந்தனர், சீன தரப்பில் 35 பேரும் உயிரிழந்தனர். ஆனால் உண்மையான எண்ணிக்கையை சீனா சொல்லவில்லை.

மோதல் தொடர்பாக இரு நாட்டு இராணுவ உயர் அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, லடாக் எல்லையில் இருந்து படைகளை வாபஸ் பெற இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்தியா- சீனா இடையே சமாதானப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதும் இருநாடுகளும் படைகளைக் குவித்த வண்ணம் உள்ளன.

இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்த மூத்த இராணுவத் தளபதிகள் நேற்று சுஷூலில் சந்தித்து பரஸ்பர விதிமுறைகளை விரிவுபடுத்துதல் மற்றும் படையை குறைத்தல் ஆகியவை குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த நிலையில் இந்தியா தனது சக்திவாய்ந்த டி-90 பீஷ்மா பீரங்கிகளை அதிகளவில் எல்லையில் குவித்து உள்ளது. துல்லியமான தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் இந்த பீரங்கி, ஒரு நிமிடத்தில் 60 குண்டுகளைப் பொழியும் ஆற்றல் மிக்கது.

இரசாயன மற்றும் உயிரி ஆயுதங்களை கையாளும் திறன் கொண்ட இந்த பீரங்கிகள் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை. 48 தொன் எடை கொண்ட இந்த பீரங்கி ஆயிரம் குதிரை விசை ஆற்றல் கொண்டதாகும். சீனா படைகளை குவித்ததை தொடர்ந்தே இந்தியாவும் படைகளை குவிக்கிறது. (2)

# இந்திய எல்லையை ஆக்கிரமித்த சீனா


## செயற்கைக்கோள் படம் வெளியீடு

(டில்லி)

கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய எல்லைக்குள் 423 மீற்றர் தூரம் வரை சீனா ஆக்கிரமித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய ஊடகமொன்று வெளியிட்டுள்ள உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் படங்களில், இந்திய நிலப்பரப்பின் 423 மீற்றர் தூரத்தில் சீனாவின் 16 கூடாரங்கள், ஒரு பெரிய தங்குமிடம் அமைக்கப்பட்டிருப்பதையும் 14 வாகனங்களையும் காண முடிகிறது.

கடந்த 25ஆம் திகதி நிலவரப்படி, 1960ஆம் ஆண்டு முதல் சீனா உரிமை கோரி வரும் எல்லைக் கோட்டுப் பகுதியில் இருந்து 423 மீற்றர் தூரம் வரையுள்ள இந்திய எல்லைக்குள் சீன படைகள் ஊடுருவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2)




# மும்பை தாஜ் ஹோட்டலுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல்



(டில்லி)

மும்பையில் உள்ள தாஜ் ஹோட்டல்களுக்கு பாகிஸ்தானிடமிருந்து வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன.

கராச்சியிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு அழைப்பை ஏற்படுத்திய மர்ப நபர், கடந்த 2008 நவம்பரில் நடைபெற்றதை போன்று தாஜ் ஹோட்டலில் மீண்டும் தாக்குதல் நடத்தப்படும் எனக் கூறி தொடர்பைத் துண்டித்துள்ளார்.

இதனையடுத்து, மும்பையின் இரண்டு தாஜ் ஹோட்டல்களான கொலப்பா மற்றும் பாந்த்ரா அருகிலுள்ள பகுதிகள் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதாக மும்பை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, தாஜ் ஹோட்டலுக்கு உள்ளேயும் அதன் சுற்றுப்புறங்களிலும் தீவிர பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடந்த 2008இல் தாஜ் ஹோட்டல் உட்பட மும்பையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 166 பேர் உயிரிழந்தனர். மேலும் 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# கொரோனா பரவ வாய்ப்பு

(ஜெனீவா)

**கொரோனா வைரஸ் இடங்களுக்கு பரவ வாய் அமைப்பின் தலைவர் டெட் எச்சரித்துள்ளார்.**

மனித அழிவுகளை ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்று குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'சீனாவில் அடையாளம் காணப்பட்ட

# சீனாவில் பன்றிகளில் மனிதர்களிடையேயும் பர



(பீஜிங்)

கொரோனா வைரஸ் போல பெருந்தொற்றாக வாய்ப்புள்ள காய்ச்சலொன்று சீனாவில் பன்றிகளிடையே தற்போது பரவி வருகிறது.

ஆனால், தற்போதுவரை இந்த வைரஸ்

# ஹொங்கொங் மீது புதிய அதிக சீனாவின் பாதுகாப்புச் சட்



(ஹொங்கொங்)

உலகளாவிய எதிர்ப்பையும் மீறி சீனா ஹொங்கொங்கிற்கான ஒரு சர்ச்சைக்குரிய தேசிய பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

புதிய சட்டம் கிட்டத்தட்ட 23 ஆண்டுகளுக்கு முன்பு, முன்னாள் பிரித்தானிய காலனியின் வாழ்க்கை முறைக்கு மிகவும் தீவிரமான மாற்றங்களுக்கு களம் அமைக்கிறது. இது நேற்று செவ்வாய்க்கிழமை சீன

# வலம்புரியும் கல்விச் சேவை வழங்கும் தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

**நேரம்: ஒரு மணித்தியாலம் 15 நிமிடம்** **வினாப்பத்திரம் - 02**

**01) பின்வரும் பந்தியை வாசித்து 1 தொடக்கம் 6 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

இந்த ஆகாயம் கடலைப்போலத் தோன்றுகிறது. அந்தக் கடலிலே வெள்ளியாற் செய்த தோணி ஒன்று மிதந்து செல்வது போல சந்திரன் காணப்படுகிறது. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றன. இந்த அழகிலே என் மனம் மிகவும் மகிழ்கிறது.

01) வானம் என்பதன் ஒத்தசொல் யாது?
.............................................

02) பந்தியில் முதலாவது வாக்கியத்திலுள்ள உவமானத்தை எழுதுக.
.............................................

03) விசிறியும் சுழியும் உள்ள சொல்லொன்றை எழுதுக.
.............................................

04) மீனை என்பதன் பன்மை வடிவத்தை எழுதுக.
.............................................

05) கடலிலுள்ள மீன்களைப் போல பரவுபவை எவை?
.............................................

06) அஃறிணைப் பன்மை வினைச்சொல்லை எழுதுக.
.............................................

**02)பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடையாளம் இடுக.**

1) பறவைக்கூட்டம் பறந்து சென்றன. ( )
2) மாணவர்கள் வேகமாகப் பாடசாலைக்குச் செல்கின்றனர். ( )
3) வானொலியில் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டது. ( )

**03)பின்வரும் மரபுத்தொடருக்கான கருத்தை எழுதுக.**

1) கண் திறத்தல் - .............................................
2) ஆறப்போடுதல் - .............................................

**04)பின்வரும் சுருக்கக்குறியீட்டிற்கான விரிவாக்கத்தினை எழுதுக.**

1) இ. ம. வ - .............................................
2) இ. பெ. கூ. - .............................................

**05)சேர்த்தெழுதுக.**

1) நெல் + வயல் = ......................... 2) பல் + பொடி = .........................

**06)சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) அவள் சிறந்த ஓட்ட ......................... (வீராங்கனை, வீராங்கணை)
2) அவன் கொண்டு வந்த பொருள் ......................... (கனமாக, கணமாக) இருந்தது.
3) அதிபர் காலையில் ......................... (உறை, உரை) யாற்றினார்.

**07)பின்வரும் கருத்தைத் தரும் பழமொழியை எழுதுக.**

1) உத்தம நட்பு. .............................................
2)கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை அல்ல .............................................

**08)தொடர்மொழிக்குரிய ஒருமொழியை எழுதுக.**

1) அறிஞர்கள் வாதிடும் களம் - .............................................
2) இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை - .............................................

**09)பேச்சுவழக்கில் தரப்பட்ட வாக்கியத்தை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக.**

1) நாங்கள் வாறோம் - .............................................
2) மழை பெய்யுது - .............................................

**10)பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.**

1) அரசன் அரண்மனைக்குச் சென்றான்.
.............................................
2) அவன் மாமா வீட்டிற்குச் சென்றான்.
.............................................

**11)பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1) Class room - ......................... 2) Eyes - .........................

**12)பின்வரும் தமிழ்ச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1) உங்களது சுகம் எப்படி? - ..................... 2) அதிபர் .....................

**13)பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1) கலுலேல்ல - ......................... 2) அம்(B)ப (G)கச .........................

**14)பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

1. ஆசிரியர் - ......................... 2) புத்தகம் .........................

**● 15 தொடக்கம் 29 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடை எழுதுக.**

15) 5, 2, 1, 6 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி மிகப்பெரிய நான்கிலக்க எண்ணை உருவாக்குக.
.............................................

16) 1000 + 300 + 10 + 6 என்பதால் வகைக்குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.
.............................................

17) 20 இலிருந்து 6 ஐக் கழித்து வரும் விடையை உரோமன் இலக்கத்தில் எழுதுக.
.............................................


18) கீழே தரப்பட்ட எண்களை இறங்குவரிசையில் எழுதுக.
4507, 2325, 1576, 6175 .........,.........,.........,.........

19)கீழே தரப்பட்ட எண்கோலத்தில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.
1) 20, 35, 50, 65, .............................................
2) 100, 96, 92, 88, .............................................

20)72 பென்சில்களை 6 மாணவர்களிடையே சமனாகப் பகிர்ந்தால் ஒருவருக்குக் கிடைக்கும் பென்சில்கள் எத்தனை?
.............................................


21) 25 மாம்பழங்களில் 2/5 பங்கு மாம்பழங்கள் விற்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் மாம்பழங்கள் எத்தனை?
.............................................

22)



கடிகாரம் காட்டுவது மாலை நேரம் எனின் அந்நேரத்தை நியம நேரமாக எழுதுக.
.............................................

23)




அருகே காட்டப்படுவது சதுரமுகியாகும். எனவே,
1) அதன் முகங்கள் எத்தனை?
2) அதன் உச்சிகள் எத்தனை?

24) துசா **15km 600m** தூரத்தைப் புகையிரதத்திலும் **6km 800m** தூரத்தைப் பேருந்திலும் சென்றாள் எனின் துசா சென்ற மொத்தத் தூரம் யாது?
..................... km .....................m

25) பாத்திரமொன்றில் 172 தாமரைப்பூக்கள் வீதம் 3 பாத்திரங்களிலுள்ள தாமரைப்பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது?
.............................................

26)



1) நிறந்தீட்டப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.
.............................................


2) முழு உருவின் அரைப்பகுதிக்கு நிறந்தீட்ட வேண்டுமாயின் மேலும் எத்தனை கட்டங்களுக்கு நிறந்தீட்ட வேண்டும்?
.............................................

27) சியானா ஒரு சட்டையை வாங்குவதற்காக கடைக்குச் சென்றாள். சட்டையின் விலை 1450.00 ரூபாய் ஆகும். ஆயினும் அவளிடம் 825.00 ரூபாய் மாத்திரம் இருந்தது எனில் அதனை வாங்குவதற்கு அவளுக்கு மேலும் எவ்வளவு பணம் தேவை?

.......................................ரூபாய்

28) *10l 500ml* கொள்ளும் தாங்கி ஒன்றின் ஒரு பகுதி நீரினால் நிரப்பப்பட்டிருந்தது. அதில் மேலும் **4l 475ml** நீரை ஊற்றிய போது தாங்கி முற்றாக நிரம்பியது. தாங்கியில் ஆரம்பத்திலிருந்த நீரின் கனவளவு யாது?

***.................. l .................. ml***

29) 

இவ்வுருவிற்கு வரையக்கூடிய சமச்சீர் அச்சுக்கள் எத்தனை?

..........................................

● **30 தொடக்கம் 59 வரையான வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30)பகவத்கீதையை புனிதநூலாகக் கொண்ட மதத்தவர் யார்?
1) இந்துக்கள்
2) இஸ்லாமியர்கள்
3) பௌத்தர்கள்

31)ஒலிம்பிக் போட்டியில் முதன் முதலில் இலங்கைக்கு பதக்கத்தை பெற்றுத் தந்தவர்?
1) சுசந்திகா ஜெயசிங்க
2) டங்கன் வைற்
3) குமார் சங்கக்கார

32) இலங்கையின் தேசிய விளையாட்டை விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை?
1)8 2)6 3)7

33) தனியாகப் பயன்படுத்தும் பொருள் அல்லாதது -
1)பற்றூரிகை 2) காலணி 3) வானொலி

34) உடல் வளர்ச்சியடைவதற்காக உண்ணும் போசணை எது?
1) புரதம்
2) விற்றமின்கள்
3) மாப்பொருள்

35)தியானச் செயற்பாட்டின் மூன்றாவது படிமுறை.
1) திடசித்தம்
2) பிரார்த்தனை
3) மலர்வு

36) இலங்கையின் தேசிய மலர் எது?
1) காட்டுமல்லிகை
2) தாமரை
3) நீலோற்பலம்

37)முலையூட்டி விலங்கு?
1) உடும்பு
2) கீரி
3) முதலை

38) எட்டுக்கால்களை உடைய பிராணி.
1) நண்டு
2) நுளம்பு
3) சிலந்தி

39) புற்றை அமைத்து வாழும் பிராணி.
1) பாம்பு 2) எலி 3) கறையான்

40) அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய் எது?
1) நெருப்புக்காய்ச்சல்
2) டெங்கு
3) மாலைக்கண்

41)இலைகளை இணைத்துக் கூடமைக்கும் பிராணி.
1) மரங்கொத்தி 2) தேனீ 3) செவ்வெறும்பு

42)பழுதடைந்ததும் நீல நிறமாக மாறும் கிழங்கு.
1) உருளைக்கிழங்கு
2) மரவள்ளிக்கிழங்கு
3) கரட்

43) தேசப்படங்களில் புகையிரதப் பாதையைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம்.
1) கறுப்பு 2) நீலம் 3) மஞ்சள்

44) மாலை நேரத்தில் மலரும் பூ
1) அந்திமந்தாரை 2)போகன்விலா 3) மல்லிகை

45) அதிக வித்துக்களைக் கொண்ட பழம்
1)மாம்பழம் 2)றம்புட்டான் 3)பலாப்பழம்

46)தியானச் செயற்பாடுகளைச் செய்வதால் கிடைக்கும் நன்மைகளில் ஒன்று
1) பதற்றம், மனப்பயம் அதிகரிக்கும்.
2) பல்வேறு நோய்கள் ஏற்படும்.
3) மன அமைதியின்மையைக் கட்டுப்படுத்தலாம்.

47) பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களைப் பெறுவதற்காகச் செல்ல வேண்டிய இடம் எது?
1) பிரதேச சபை
2) பிரதேச செயலகம்
3) மாவட்ட செயலகம்

48) 

தரப்பட்ட குறியீடு குறிப்பது.
1) முன்னால் பாதசாரிக் கடவை.
2) முன்னால் சிறுவர் கடவை.
3) பாதசாரிகள் கடக்குமிடம்.

49) இலங்கை நாட்டிற்கே உரித்தான தாவரம் எது?
1) தேக்கு 2) பெரும்பிரம்பு 3) வேம்பு

50) சுவரோவியங்களுக்கு பிரசித்தமான இடம்.
1) சீகிரியா 2) காலிக்கோட்டை 3) இசுறுமுனிய


51) இலங்கையில் விளையாடப்படும் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.
1) துடுப்பாட்டம் 2) கிட்டிப்புள்ளு 3) வலைப்பந்தாட்டம்

52) தாள்களை ஒன்றோடு ஒன்று பிணைப்பதற்குப் பயன்படும் உபகரணம் எது?
1) துளைகருவி 2) கைவில்லை 3) பிணைகருவி

53) இரவில் நடமாடும் பிராணியாக அமையாதது.
1) ஆந்தை 2) பாம்பு 3) காகம்

54) இலங்கையில் அதிக மாவட்டங்களைக் கொண்ட மாகாணம் எது?
1) தென்மாகாணம்
2) ஊவாமாகாணம்
3) வடமாகாணம்

55) மேசன் (கொத்தன்) பயன்படுத்தும் உபகரணம்.





1) 2) 3)

56) மீனவர்கள் சிறுமீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்துள்ள உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?
1) கரைவலை 2) அத்தாங்கு 3) நாம்புவ

57) கண்ணாடிக் கழிவுகளை இட வேண்டிய குப்பைத் தொட்டியின் நிறம் யாது?
1) சிவப்பு 2) நீலம் 3) செம்மஞ்சள்

58)வெளிச்சத்தினைப் பெறுவதற்கான மின்மினிப் பூச்சியை தனது கூட்டினுள் ஒட்டி வைக்கும் பிராணி.
1) தூக்கணாங்குருவி
2) மழைக்குருவி
3) கும்பிடுபூச்சி

59) பூனை மிகவும் விரும்பி உண்ணும் தாவரம்
1) வல்லாரை 2) குப்பைமேனி 3) கோரைப்புல்

60) "உமது நண்பனிடம் உள்ள உமக்குப் பிடித்த நற்பழக்கங்கள்" எனும் தலைப்பில் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக அமைதல் வேண்டும்.

..........................................................................................

..........................................................................................

# வலம்புரியும் கல்விச் சேவை வழங்கும்
# க.பொ.த.சா/தரப் பரீட்சை
# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

**நேரம்: 3 மணித்தியாலம்** **வினாப்பத்திரம் - 01**

1. நான்காம் தலைமுறைக் கணினி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது?
1. ஒருங்கிணைந்த சுற்று, வெற்றிடக்குழாய், மிகப் பேரளவு ஒருங்கிணைந்த சுற்று என்பன பயன்படுத்தப்பட்டன.
2. மிகப் பேரளவு ஒருங்கிணைந்த சுற்று, பேரளவு ஒருங்கிணைந்த சுற்று, நுண் முறைவழியாக்கி என்பன பயன்படுத்தப்பட்டன.
3. திரான்சிஸ்ரர், பேரளவு ஒருங்கிணைந்த சுற்று, மிகப் பேரளவு ஒருங்கிணைந்த சுற்று என்பன பயன்படுத்தப்பட்டன.
4. ஒருங்கிணைந்த சுற்று, வெற்றிடக்குழாய், மிகப் பேரளவு ஒருங்கிணைந்த சுற்று என்பன பயன்படுத்தப்பட்டன.

2. பின்வரும் எக்கூட்டமானது ஒளியியல் சேமிப்பு ஊடகங்களை மட்டும் கொண்டுள்ளது?
1. CD-R, DVD-RW, CD-ROM
2. DVD-RW, நெகிழ்வட்டு, வன்வட்டு
3. பளிச்சீட்டு செலுத்தி, நெகிழ்வட்டு, CD-R
4. CD-R, CD-ROM, பளிச்சீட்டு செலுத்தி

3. மருத்துவமனையில் பயன்படுத்தப்படும் ECG பொறி எவ்வகை கணினியாகும்.
1. பெருமுகக்கணினி 2. கலப்புக்கணினி
3. இலக்கமுறைக்கணினி 4. ஒத்திசைக் கணினி

4. நாண்கள் இல்லாத சுட்டியில் பயன்படுத்தப்படும் ஊடகம் பின்வருவனவற்றுள் எது?
1. வானொலி அலை 2. முறுக்கிணைக்கம்பி
3. நுண்அலை 4. செங்கீழ்கதிர்


5. 0.095860 என்ற எண்ணின் LSD,MSD ஆகியன முறையே
1. 9,6 2. 0,6 3. 6,9 4. 6,0

6. பின்வரும் எண்கூட்டங்களின் ஏறுவரிசையைக் கொண்ட விடைத் தொகுதி எது?
1. $64_{16}$, $101011_2$, 75, $44_8$ 2. $101011_2$, $44_8$, 75, $64_{16}$
3. $44_8$, $101011_2$, 75, $64_{16}$ 4. 75, $44_8$, $101011_2$, $64_{16}$


7. ASCII குறியீட்டு முறையில் C ஆனது $1000010^2$ என வகை குறிக்கப்படும் எனின் $1000110_2$ னால் வகை குறிக்கப்படுவது.
1. G 2. E 3. F 4. D



8. $101011101_2$ இற்கு சமவலுவானது பின்வருவனவற்றுள் எது?
1. $13D_{16}$ 2. 435 3. 446 4



9. தரப்பட்டுள்ள தர்க்கச்சுற்றின் வெளியீடு 1 பெறுவதற்கு வழங்கப்பட வேண்டிய உள்ளீடுகள்
1. 1, 0 2. 0, 1 3. 0, 0 4. 1, 1



10. தரப்பட்டுள்ள தர்க்கவாயிலுக்கு சமவலுவான தர்க்கவாயில் பின்வருவனவற்றுள் எது?



1.  2. 

3  4. 

11. பின்வருவனவற்றுள் எது பணிசெயல் முறைமையில் நினைவக முகாமையின் ஒரு பகுதியாக நிறைவேற்றப்படும் ஒரு செயற்பாடாகும்.
1. வன்வட்டிற்குள் பிரவேசித்தல்
2. ஒரு கொள்பணி நிறைவேற்றப்பட்ட பின்னர் நினைவகத்தை விடுவித்தல்
3. ஓர் உறையில் கோப்புகளை ஒழுங்கமைத்தல்.
4. சாதனங்களை முகாமை செய்தல்.


12. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A – வன்வட்டின் தரவுப்பெறுவழிக் கதியானது பதிவேட்டு நினைவகத்தின் தரவுப்பெறுவழிக்கதியிலும் உயர்வானது.
B – பதிவேட்டு நினைவகத்தில் தரவுகளை தேக்கி வைப்பதற்கான பிற்றுக் கிரயம் ஒரு வன்வட்டின் தரவுகளை தேக்கி வைப்பதற்கான கிரயத்திலும் உயர்ந்தது.
C – வன்வட்டின் தரவுக் கொள்ளளவானது பதிவேட்டு நினைவகத்தின் தரவுக்கொள்ளளவிலும் குறைவானது.

மேலுள்ள கூற்றுகளில் சரியானது/சரியானவை எது/ஏவை?
1. A மட்டும் 2. A,B மட்டும்
3. C மட்டும் 4. B மட்டும்

13. சொல்முறை வளப்படுத்தல் மென் பொருளில் பயன்படும் குறுக்குச்சாவி தொடர்பான பின்வரும் கூற்றுகளை கருதுக.
A – பாடத்தை (Text) தடிப்பாக்குவதற்கு CTRL+B பயன்படுகின்றது.
B – பாடத்தை வெட்டுவதற்கு CTRL+Z பயன்படுகின்றது.
C – பாடத்தை ஒட்டுவதற்கு CTRL+V பயன்படுத்தப்படுகின்றது.

மேற்குறித்த கூற்றுகளில் சரியானது/சரியானவை?
1. Aமட்டும் 2. A, C
3. B, C 4. A, B, C

14. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் பயன்படும் வடிவமைப்புக் கருவிகள் A தொடக்கம் D வரை முகப்படையாளம் இடப்பட்டுள்ளன.




A,B,C,D இன் சரியான ஒழுங்கை காட்டும் விடை எது?
1. ஒட்டுதல், வலது நேர்ப்படுத்தல், குண்டுப்பட்டியல், வெட்டுதல்.
2. ஒட்டுதல், குண்டுப்பட்டியல், வெட்டுதல், வலது நேர்ப்படுத்தல்
3. ஒட்டுதல், வெட்டுதல், வலது நேர்ப்படுத்தல், குண்டுப்பட்டியல்
4. ஒட்டுதல், வலது நேர்ப்படுத்தல், வெட்டுதல், குண்டுப்பட்டியல்

15. தரப்பட்டுள்ள விரிதாளைப் பயன்படுத்தி உள்ள 4ஆம் வாய்ப்பாட்டை பெறுவதற்கு கலம் A3 இல் எழுதவேண்டிய சமன்பாடு பின்வருவனவற்றுள் எது?

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 2 | 2 | 4 | 5 |
| 2 | 4 | | | | |
| 3 | 4 | 8 | 12 | 16 | 20 |
| 4 | | | | | |

1. =A1*A2 2. =A1*$A2
3. =$A1*A2 4. =A$1*A$2

16. அருகிலுள்ள விரிதாளில் கலம் C3 இல் =A3-$B$3 என எழுதப்பட்டிருந்தால் இதனை C4 இற்கு பிரதி செய்யும்போது கிடைக்கும் பெறுபேறு யாது?

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | 16 | 4 | 12 |
| 4 | 10 | 5 | |
| 5 | | | |

1. 5 2. 6 3. 7 4. 8

17. முன்வைப்பு மென்பொருள் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A – படவில்லைக் காட்சித் தோற்றம் (Slide show view) வெள்ளை நிறத்தில் காட்சியளிக்க W சாவியை அழுத்தவேண்டும்.
B - படவில்லையின் இடத்தை மாற்றுவதற்கு Slide sorter view சிறந்தது.
C - படவில்லைக் காட்சியை(Slide Show) பெறுவதற்கான குறுக்குச் சாவி F5 ஆகும்.

மேற்குறித்த கூற்றுகளில் சரியானது/சரியானவை?
1. A மட்டும் 2. A, C 3. B, C 4. A, B, C

கீழே தரப்பட்டுள்ள உற்பத்தி, விற்பனை மற்றும் வாடிக்கையாளர்அட்டவணைகளைக் கொண்டு தொடக்கம் வரையான வினாக்களுக்கு விடை தருக.

உற்பத்தி

| Product_ID | Product_Name | Price |
|---|---|---|
| P001 | T.V | 32,000.00 |
| P002 | Radio | 18,000.00 |
| P003 | Video Player | 23,000.00 |

விற்பனை

| Customer_ID | Product_ID | Qty_Sold |
|---|---|---|
| 001 | P001 | 1 |
| 002 | P002 | 2 |
| 001 | P001 | 1 |

வாடிக்கையாளர்

| Customer_ID | Customer_Name | City |
|---|---|---|
| 001 | Mr.Gurnarathna | Rathnapura |
| 002 | Mrs.Samarawera | Rathnapura |
| 003 | Ms.Gamage | Rathnapura |

18. உற்பத்தி அட்டவணையின் முதன்மைச் சாவி பின்வருவனவற்றுள் எது?

1. Product_ID  2. Product_Name
3. Price  4. Customer_ID

19. அந்நியச்சாவி தொடர்பான பின்வரும் கூற்றுகளை கருதுக.

A - உற்பத்தி அட்டவணையில் Product_ID அந்நியச்சாவியாகும்.
B - விற்பனை அட்டவணையில் Product_ID அந்நியச்சாவியாகும்
C - விற்பனை அட்டவணையில் Customer_ID அந்நியச்சாவியாகும்
D - வாடிக்கையாளர் அட்டவணையில் Customer_ID அந்நியச்சாவியாகும்

மேலுள்ள கூற்றுகளில் பிழையானவை எது/எவை?

1. A, B  2. B, C  3. A, D  4. B, D

20. T.V ஐ கொள்வனவு செய்த வாடிக்கையாளரின் இலக்கத்தை (Customer_ID) பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்த வேண்டிய அட்டவணை/அட்டவணைகள் எது?

1. உற்பத்தி அட்டவணையும் வாடிக்கையாளர் அட்டவணையும்.
2. உற்பத்தி அட்டவணையும் விற்பனை அட்டவணையும்.
3. உற்பத்தி, விற்பனை, வாடிக்கையாளர் அட்டவணைகள்.
4. விற்பனை அட்டவணை மட்டும்.

21. Mrs.Samarawera கொள்வனவு செய்த பொருள்/பொருட்கள் எது?

1. T.V, Radio  2. T.V, Video Player
3. T.V  4. Radio

22. தரவுத்தள மென்பொருள் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் பிழையானது?

1. முதன்மைச்சாவி புலமானது வெற்றுப் பெறுமதியைகொண்டிருக்கும்.
2. ஓர் இலக்குப் பொருள் தொடர்பான புலங்களின் சேகரிப்பானது பதிவு ஆகும்.
3. தொடர்புபட்ட அட்டவணைகளின் சேகரிப்பானது தரவுத்தளம் ஆகும்.
4. ஓர் அட்டவணையின் அந்நியச்சாவியானது இன்னோர் அட்டவணையின் முதன்மைச் சாவியாகும்.

23. மின்னஞ்சல் முகவரி, URL, IP முகவரி, வலைமேலோடி என்பவற்றைக் முறையே கொண்ட விடை எது?

1. www.google.lk, raja@yahoomail.com,192.168.78.2, Internet Explorer
2. raja@yahoomail.com, www.google.lk, 192.168.78.2, Internet Explorer
3. Internet Explorer,www.google.lk, raja@yahoo mail. com, 192.168.78.2
4. 192.168.78.2, www.google.lk, raja@yahoo mai. com, Internet Explorer

24. கமலா என்பவர் மீனாவிற்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பி CCஐப் பயன்படுத்தி அதே மின்னஞ்சலை வாணிக்கும் ராதாவுக்கும் நகல் செய்தான். கமலா BCCஐ பயன்படுத்தி ராணிக்கு ஒரு நகலை அனுப்பினான். பின்வருவனவற்றுள் இந் நிகழ்வு தொடர்பாக சரியானது.

1. மீனாவுக்கு கிடைத்த மின்னஞ்சல் அதன் அனுப்புனரான கமலாவை காட்சிப்படுத்தவில்லை.
2. மீனாவுக்கு கிடைத்த மின்னஞ்சல் அதன் வேறொரு பெறுநராக ராணியை காட்சிப்படுத்த வில்லை.
3. மீனாவிற்கு கிடைத்த மின்னஞ்சல் அதன் வேறொரு பெறுநரான வாணியை காட்சிப்படுத்தவில்லை.
4. மீனாவிற்கு கிடைத்த மின்னஞ்சல் அதன் வேறொரு பெறுநராக ராதாவை காட்சிப்படுத்தவில்லை.

25. முகில் கணியின் சேவைகளைக் கொண்டதொகுதி பின்வருவனவற்றுள் எது?

1. உட்கட்டமைப்பு வசதிச் சேவை, அபிவிருத்திச் சூழல் சேவை, மென் பொருள் சேவை
2. கட்டமைப்பு சேவை, அபிவிருத்திச்சூழல் சேவை, மென்பொருள் சேவை
3. உட்கட்டமைப்பு வசதிச் சேவை, அபிவிருத்திச் சூழல் சேவை, வன் பொருள் சேவை
4. உட்கட்டமைப்பு வசதிச்சேவை, சூழல் சேவை, மென்பொருள் சேவை

26. தரப்பட்டுள்ள போலிக்குறிமுறையின் வெளியீடு யாது?

```
Count = 1
Repeat
  Count = Count + 2
Until Count > 10
Display Count
```

1. 5  2. 7.  3. 9  4. 11


27. 1 தொடக்கம் 20 வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகையை காண்பதற்கான போலிக்குறிமுறை தரப்பட்டுள்ளது.

```
sum=0
n=2
while ®
    sum=sum+n
    n=n+2
End while
display sum
```

பின்வருவனவற்றுள் எது முகப்படையாளம் ® இற்கு மிகப் பொருத்த மானது.

1. n < 20  2. n > 20  3. n<=20  4. n>=20

தரப்பட்டுள்ள பாய்ச்சற்கோட்டு படத்தை அடிப்படையாகக் கொண்டு 28 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடை தருக.



28. தரப்பட்டுள்ள பாய்ச்சற்கோட்டு படத்தின் செயன்முறை, தீர்மானம், வெளியீடு என்பவற்றை முறையே சரியாக காட்டும் விடை எது?

1. x=5> x=x*2> print x-2
2. x=x*2> is x<25> print x-2
3. is x<25> print x-2> x=x*2
4. x=x*2> print x-2> is x<25


29. பாய்ச்சற் கோட்டு படத்தின் வெளியீடு யாது?

1. 8  2. 18  3. 28  4. 38

30. x<25 என்பதை x>25 என மாற்றம் செய்தால் வெளியீடு யாது?

1. 3  2. 8  3. 18  4. 38

31. பின்வரும் போலிக்குறிமுறைகளில் எது தரப்பட்டுள்ள பாய்ச்சற்கோட்டு படத்திலுள்ள நெறிமுறையின் தர்க்கத்திற்குச் சமவலுவானது?




1.
```
x=0
while x>=3
    x=x+1
end while
print x
```

2.
```
x=0
while x<=3
    x=x+1
end while
print x
```

3.
```
x=1
while x>=3
    x=x+1
end while
print x
```

4.
```
x=1
while x<=3
    x=x+1
end while
print x
```

32. முறைமையை பரீட்சித்தல் வகைகளின் சரியான ஒழுங்கினைக் கொண்ட விடைஎது?

1. அலகுச் சோதனை, முறைமைச் சோதனை, முழுமைச் சோதனை, பயனர் அங்கீகரிப்பதற்கான சோதனை.
2. அலகுச் சோதனை, முழுமைச் சோதனை, முறைமைச் சோதனை, பயனர் அங்கீகரிப்பதற்கான சோதனை
3. அலகுச் சோதனை, பயனர் அங்கீகரிப்பதற்கான சோதனை, முறைமைச் சோதனை, முழுமைச் சோதனை
4. முறைமைச் சோதனை, அலகுச் சோதனை, முழுமைச் சோதனை, பயனர் அங்கீகரிப்பதற்கான சோதனை

33. உருவாக்கப்படும் புதிய முறைமையின் செலவினை அந் நிறுவனத்தினால் ஈடு செய்ய முடியுமா என்பதை பரீட்சிக்கும் இயலுமை ஆய்வு வகை எது?

1. தொழில்நுட்ப இயலுமை ஆய்வு
2. செய்பணி இயலுமை ஆய்வு
3. பொருளாதார இயலுமை ஆய்வு
4. சட்ட இயலுமை ஆய்வு

34. HTML ஐ பயன்படுத்தி அமைக்கப்பட்ட ஓர் இணையப் பக்கத்தில் பயனர் விம்பத்தை (image) பார்க்க முடியாத சந்தர்ப்பத்தில் அவ் விம்பம் தொடர்பான பிரதியீட்டு தகவலை தருவது பின்வருவனவற்றுள் எது?

1. img  2. src  3. alt  4. href

35. பின்வரும் வெளியீட்டை பெறுவதற்கு சரியான HTML குறிமுறை எது?

**Courses**

| Programming languages | |
|---|---|
| JAVA | Pascal |

1.
```
<table>
<caption><h1>Courses</h1></caption>
<tr><th colspan="2">Programming language</th></tr>
<tr><td>JAVA</td><td>Pascal</td></tr>
</table>
```

2.
```
<table>
<caption><h1>Courses</h1></caption>
<tr><th >Programming language</th></tr>
<tr><td>JAVA</td><td>Pascal</td></tr>
</table>
```

3.
```
<table>
<caption>Courses</caption>
<tr><th colspan="2">Programming language</th></tr>
<tr><td>JAVA</td><td>Pascal</td></tr>
</table>
```

4.
```
<table>
<caption>Courses</caption>
<tr><td colspan="2">Programming language</td></tr>
<tr><td>JAVA</td><td>Pascal</td></tr>
</table>
```

# வெளிநாடு

# னா வைரஸ் இன்னும் அதிக இடங்களுக்கு ப்புள்ளது- உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

## வரஸ் தொற்று இன்னும் அதிக வ வாய்ப்புள்ள்தாக உலக சுகாதார ர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ்

கொரோனா வைரஸால் ஒரு கோடி பேருக்கு மேல் பாதிக்கப்பட்டு 5 இலட்சத்திற்கும் மேலானோர் உயிரிழந்த மோசமான மைல்கல்லை எட்டியுள்ளோம்.

தற்போதைய சூழலில் அரசாங்கங்கள் சரியான கொள்கைகளைச் செயற்படுத்தத் தொடங்கவில்லை என்றால் இந்த வைரஸ் இன்னும் பலரை பாதிக்கும். உலகின் பாதி அள



வுக்கான கொரோனா பாதிப்புகள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கண்டறியப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தாக்கம் முடிந்துவிட வேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோம்.

நாம் அனைவரும் நம் வாழ்க்கையை பழையபடி தொடர விரும்புகிறோம். ஆனால் கடினமான உண்மை என்னவென்றால், இது முடிவடைவதற்கான சூழல் தற்போது அருகில் இல்லை. அமெரிக்கா, பிரேஸில், இந்தியா உள்ளிட்ட நாடுகள் தத்தளித்து வந்தாலும் நியூசிலாந்து உள்ளிட்ட பல நாடுகள் உறுதியான நடவடிக் கைகளால் மீண்டுள்ளன' என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## களில் புதிய வைரஸ் ும் பரவலாம் என அச்சம்

மக்களிடையே பரவவில்லை என்ற போதிலும் எந்த நேரத்திலும் இது மனிதர்களைத் தாக்கலாம் என்ற ஆபத்து எழுந்துள்ளது.

இந்த வைரஸை ஜி4 இஏ எச்1என்1 என அழைக்கும் ஆராய்ச்சியாளர்கள், இக்காய்ச்சல் கொரோனா வைரஸ் தொற்று போல உலகப் பெருந்தொற்றாக மாறும் அச்சுறுத்தல் உள்ளது என ஆய்வாளர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இது புதுவிதமான வைரஸ் என்பதால் மனிதர்களுக்கு இதனை எதிர்கொள்ள நோயெதிர்ப்புத் திறன் இருக்காது என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இது குறித்து தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வரும் பேராசிரியர் கிம் சவு சாங், இதனை தாம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (2)

## ய அதிகாரங்களை செலுத்தும் புச் சட்டம் நிறைவேற்றம்



நாடாளுமன்றத்தின் உயர் முடிவெடுக்கும் குழுவால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டம் கீழ்த்தரமான, பிரிவினைவாத மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதையும் ஹொங்கொங்கின் விவகாரங்களில் வெளிநாட்டு தலையீட்டையும் கட்டுப்படுத்தும் நோக்கமாகக் கொண்டது என்று கூறப்படுகிறது. (2)

# காசிம் சுலைமானி தாக்குதல் விவகாரம்; ஈரான் ட்ரம்பிற்கு பிடியாணை உத்தரவு

## இன்டர்போலின் உதவியை நாடும் ஈரான்



(டெஹ்ரான்)


ஈரானிய புரட்சி பாதுகாப்புப் படையின் குட்ஸ் படைப்பிரிவுத் தளபதி காசிம் சுலைமானி கொல்லப்பட்ட விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை கைதுசெய்ய ஈரான் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், காசிம் சுலைமானி மீதான ஆளில்லா விமான தாக்குதலை நடத்தியதாக நம்பப்படும் 30 இற்கும் மேற்பட்டோரையும் தடுத்து வைக்க இன்டர்போலிடம் ஈரான் உதவி கோரியுள்ளது.

இதற்காக, பிரான்ஸின் லியோனைத் தளமாகக் கொண்ட சர்வதேச குற்றவியல் பொலிஸ் அமைப்பான இன்டர்போலின் உதவியை நாடியுள்ளது. எனினும், ஈரான் உதவி கோரியதற்கு இன்டர்போல் உடனடியாக பதிலளிக்கவில்லை.

ட்ரம்ப் கைது செய்யப்படும் அபாயத்தை எதிர்கொள்ளவில்லை என்றாலும் தற்போதைய சூழலில் இந்த விடயம் மிகப்பெரிய விடயமாக பார்க்கப்படுகின்றது.

ட்ரம்பிற்கும் மற்றவர்களுக்கும் ஈரான் ஒரு. சிவப்பு அறி



விப்பை வெளியிடுமாறு கோரியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இன்டர்போலுக்கு வழங்கப்பட்ட மிக உயர்ந்த அளவிலான கைது கோரிக்கையை பிரதிபலிக்கிறது.

கடந்த ஜனவரி 3 ஆம் திகதி பக்தாத் சர்வதேச விமான நிலையத்தின் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூத்த ஈரான், ஈராக் அதிகாரிகளின் கார்களை குறிவைத்து ஆளில்லா விமானங்கள் மூலமாக அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

இதில், ஈரான் உயர்மட்டத் தளபதி காசிம் சுலைமானி மற்றும் ஈராக்கின் ஹஷீத் அல்-ஷாபி இராணுவப் படையின் துணைத் தலைவர் அபு மஹ்தி அல்-முஹந்திஸ் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் 8 பேர் உயிரிழந்தனர். இவர்கள் அனைவரும் அமெரிக்காவின் கறுப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்கள் ஆவர்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வழிகாட்டுதலின் படி, ஈராக்கில் உள்ள அமெரிக்கர்களைப் பாதுகாக்கும் விதமான தற்காப்பு நடவடிக்கையாக இவர்கள் குறிவைக்கப்பட்டதாக பின்னர் அமெரிக்க இராணுவம் விளக்கம் அளித்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஆப்கானிஸ்தானில் குண்டு வெடிப்பு! 25 பேர் உயிரிழப்பு, 15 பேர் படுகாயம்!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் சந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பு தாக்குதலில் பொதுமக்கள் 23 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் ஹெல்மெண்ட் மாகாணம் சங்கின் மாவட்டத்தில் உள்ள சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரொன்று திடீரென வெடித்துச்சிதறியது.

இந்த குண்டுவெடிப்பு தாக்குதலைத்தொடர்ந்து ரொக்கெட் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் சந்



தைப்பகுதியில் இருந்த பொதுமக்கள் 23 பேர் உயிரிழந்தனர். மேலும் 15 பேர் படுகாயமடைந்தனர். சந்தைப்பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலை தலிபான் பயங்கரவாதிகள்தான் நிகழ்த்தியுள்ளதாக ஆப்கானிஸ்தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தலிபான் பயங்கரவாதிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே 19 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இந்த உள்நாட்டுப் போரில் ஆப்கானிஸ்தான் அரசுக்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஆதரவு அளித்து வருகின்றன. இந்த உள்நாட்டுப்போரில் பயங்கரவாதிகள் அவ்வப்போது பொதுமக்களை குறிவைத்து தற்கொலைப்படை தாக்குதல்களும் நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (2)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

11

கலாநிதி முருகர் குணசிங்கம்

மொத்தத்தில் 1983 இனப்படுகொலைகள் போராட்ட இயக்கங்களுக்கு மேலும் பல வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தன. முதலாவதாக இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் விடுதலை இயக்கத்தினர் ஆதரவு பெற்றனர்.

இரண்டாவதாக தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தும் அளவிற்கு உலக நாடுகளின் கவனத்தையும் ஈர்த்தனர். மூன்றாவதாக தமிழ் மக்களின் ஒட்டுமொத்த ஆதரவையும் விடுதலை இயக்கங்கள் பெற்றன.

நான்காவதாக மேலைத்தேய நாடுகளுக்கு அகதிகளாகச்சென்ற தமிழ் மக்களின் ஆதரவும் அவர்களுக்குக் கிடைத்தது.

எல்லாவற்றிற்கும் மேலாகப் பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களும் பெண்களும் ஈழ விடுதலைப் போராட்டத்தில் துணிச்சலோடும் உணர்வோடும் பங்கேற்க வழிவகுத்தது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்க இலங்கை முப்படைகளால் முடியாது போன ஒருநிலையில் ஜெயவர்த்தன இந்திய அரசின் உதவியை நாடினார்.

இந்திராகாந்தியின் திடீர் மரணத்தின்போது இந்தியப் பிரதமராகப் பொறுப்பு ஏற்ற இளைஞரான ராஜீவ்காந்தி அரசியல் அனுபவம் அற்றவராகவே காணப்பட்டார்.

குள்ளநரி என இந்திராகாந்தியால் வர்ணிக்கப்பட்ட ஜெயவர்த்தன ராஜீவ் காந்தியுடன் தந்திரமாக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். அதில் இரு நாட்டுத் தலைவர்களும் கைச்சாத்திட்டனர்.

இதன் விளைவாக இந்தியப் படைகள் 1987 இல் இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்தன. அமைதியைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரால் தமிழர்களுக்கு எதிராகப் பல கொடுமைகளைச் செய்தன.

1990 ஆம் ஆண்டு இந்திய அரசியலில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. வி.பி.சிங் தலைமையில் "தேசிய முன்னணி" அரசு அமைந்தது. 1990களின் ஈற்றில் இந்தியப்படை இலங்கையை விட்டு குறிப்பாக தமிழர் பிரதேசங்களை விட்டு வெளியேறியது. அதன்பின்னர் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள முப்படைகளுக்கும் இடையில் போர் தீவிரம் அடைந்தது.


இறுதியாக 2002 ஆம் ஆண்டில் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலகட்டப் பேச்சு வார்த்தைகள் இலங்கை உட்பட பல நாடுகளில் இடம்பெற்றன.

ஆனால் எந்தத் தீர்வும் எட்டப்படாத நிலையில் 2005 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நோர்வே தனது சமாதான முயற்சிகளைக் கைவிட்டுப் பின்வாங்கியது. அதன்பின்னர் போர் உச்சக்கட்டத்தை அடைந்தது.

ஈற்றில் இலங்கை அரசு இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா, தென்னாபிரிக்கா போன்ற பல நாடுகளின் இராணுவ தந்திரோபாய உதவிகளைப் பெற்று 2009 மே இல் ஈழ விடுதலைப் போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்ததாக அறிவித்தது.

அந்தப் போரில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்களின் உயிர்கள் 2009 மே 16 இல் பறிக்கப்பட்டன. மூன்று இலட்சம் அப்பாவித் தமிழர்கள் மிருகங்கள் போல் அரசப்படையினரால் நடத்தப்பட்டு எதுவித வசதியுமற்ற தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலைமைக்கு ஈழத்தமிழர்களை ஆளாக்கிய இங்கிலாந்தும் இந்தியாவும் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தன. மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் (UN) ஐ.நா.சபையும் வாய்மூடிப் பேசாமடைந்தையாக இருந்தது.



உலகின் எந்த ஒரு நாடும் இந்த மாபெரும் மனித அவலத்தைக் கண்டித்துக் குரல் கொடுக்கவில்லை. முன்னாளில் யூத இனத்திற்கும் இக்கதிதான் நடந்தது. அவர்கள் இன்று சுதந்திர நாட்டில் வளமும் வல்லமையும் மிக்க மக்களாக வாழ்கின்றனர்.

இதனை தமிழ் இன அழிப்பில் ஈடுபட்ட அத்தனை நாடுகளும் உணர வேண்டிய நிலையும் சிந்திக்க வேண்டிய தேவையும் எதிர்காலத் தமிழர்களின் வரலாறு காட்டி நிற்கும். இது காலத்தின் கட்டாயம் ஆகும்.

உலகில் எந்த ஒரு தேச விடுதலைப் போராட்டமும் அடக்குமுறையால் முடிந்து விட்டதாக வரலாறு இல்லை என்பதை சிங்கள அரசும் இம்மனித அவலத்திற்குத் துணைபோன நாடுகளுக்கு புரிந்து கொள்ள வில்லை என்பதே உண்மை ஆகும்.

## புலப்பெயர்வும் மக்கள் தொகையும்

### ஆசிய பசுபிக் நாடுகள் இந்தியா - தமிழ்நாடு

ஈழத்தமிழர்களுக்கும் இந்தியாவில் வாழும் தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கும் வரலாறு தொடங்கிய காலத்திற்கு முன்பு இருந்தே சமூக, சமய, மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, பொருளியல், அரசியல் சார்ந்த தொடர்புகள் மிக நெருக்கமாக இருந்து வருகின்றன. காரணம் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாடும் இலங்கையும் ஒரே நிலப்பரப்பாகவே இணைந்து இருந்தன.

அதன்பின்னர் நிகழ்ந்த இயற்கைச் சீற்றங்களாலும் கடல் கோளாறும்தான் இரு நிலப்பரப்பாகப் பிளவுபட்டன. இன்றைக்கும்கூட இரு நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி பதினேழு மைல்கள் மட்டுமே.

வரலாற்றுக் காலத்தில் இருந்து இவ்விரு நிலப்பரப்பில் வாழும் மக்களுக்கு இடையே பல்வேறு தொடர்புகள் இருந்து வந்தமையை சங்க இலக்கியங்களில் இருந்தும் தொல்பொருள் சான்றுகளில் இருந்தும் அறிய முடிகிறது.

எடுத்துக்காட்டாக "ஈழத்துப் பூதந்தேவனார்" என்னும் ஈழத்தமிழர் தமிழ் நாட்டின் சங்க காலமாகிய கி.பி.100-300களில் சங்கப் புலவர்கள் வரிசையில் எண்ணப்படுவர். இவரின் பாடல்கள் சங்க நூல்களில் குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ளன.

கி.பி.மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னர் வருகின்ற "சங்கமருவிய காலம்" என வரலாற்றில் குறிப்பிடப்படுகின்ற காலகட்டமாகிய கி.பி.300-600 இற்கு இடைப்பட்ட ஆண்டுகளில் தமிழ் நாட்டில் பௌத்த சமயம் மேலோங்கி இருந்தது என்பதற்கு பௌத்த இலக்கியங்கள் சான்றாக விளங்குகின்றன. இலங்கையிலும் தமிழர் மத்தியில் பௌத்த மதம் பரவி இருந்தது.

யாழ்ப்பாணத்தில் கந்தரோடையில் உள்ள பௌத்த தலம் அதற்குச் சான்று ஆகும். பௌத்த குருமார்கள் தமிழகத்திலும் ஈழத்திலும் சமயப் பணி ஆற்றினர்.

கி.பி.6 ஆம் நூற்றாண்டை அடுத்து வருகின்ற பல்லவர் காலப்பகுதியில் (கி.பி.600-900) தமிழ்நாட்டில் சைவம் எழுச்சி பெறுகிறது.

இக்காலகட்டத்தில் பல சைவசமயக் குரவர்கள் தமிழகத்திலும் சோழர் ஆட்சிக் காலப் பகுதியில் (கி.பி.900-1200) கி.பி.பத்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இருந்து கி.பி.பதினொராம் நூற்றாண்டு இறுதிவரை இலங்கை சுமார் 77 ஆண்டுகள் சோழர்களால் ஆட்சி செய்யப்பட்டது.

இக்காலகட்டத்தில் பல ஈழத்தமிழர்கள் தமிழ்நாட்டுக்குச் சென்று வாழ்ந்தமை குறித்துப் பல்வேறு ஆவணங்களின் வழியாக அறிய முடிகின்றது.

1505களில் இலங்கைக்குள் காலடி வைத்த போர்த்துக்கீசர், சிங்களவர்களின் கோட்டை அரசைக் கைப்பற்றிய பின் தமது கவனத்தைத் தமிழர்களின் யாழ்ப்பாண அரசுப் பக்கம் திருப்பினர். ஆனால் அந்த நூற்றாண்டின் இறுதி வரையிலும் அவர்களால் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்ற முடியவில்லை.

தொடர்ச்சியாகப் பல முற்றுகைகளைத் தொடுத்தும் முயற்சி பலிக்கவில்லை. ஆனால் யாழ்ப்பாண அரசில் நிலவிய உட்பூசல்கள், பதவி அதிகார வெறி ஆகிய காரணங்களால் சில நயவஞ்சகக்காரர்கள் காட்டிக் கொடுத்தால் யாழ்ப்பாண அரசு போர்த்துக்கீசர் மேலாண்மையை ஏற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.


1591 இல் போர்த்துக்கீசத் தளபதிக்கும் யாழ்ப்பாண மன்னனுக்கும் இடையில் ஏற்பட்ட "நல்லூர் உடன்படிக்கை" மூலம் போர்த்துக்கீசர்களுக்கு வரி செலுத்த வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

அதன்பின்னர் வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படும் இரண்டாவது சங்கிலி மன்னன் போர்த்துக்கீசப் படைகளுடன் நடத்திய இறுதிப் போரில் தேசத் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட கொடிய சம்பவம் நிகழ்ந்தது.

எனவே சங்கிலி மன்னன் தனது மனைவி. இரு மகள்கள், உடன்பிறப்புகளுடன் ஒரு சிறிய கப்பலில் ஏறித்தமிழ் நாட்டுக்குத் தப்பி ஓட முயற்சித்தான்.


கடல் கொந்தளிப்பும் வீசிய புயல் காற்றும் அவனது கப்பலைத் தமிழ் நாட்டுக் கரையை அணுக முடியாது வஞ்சகம் செய்தன. போர்த்துக்கீசப் படைகள் நடுக்கடலில் இடைமறித்துத் தாக்கி சங்கிலி மன்னனையும் அவரது குடும்பத்தினரையும் கைது செய்து போர்த்துக்கீசர்களின் இந்தியத் தலைமைச் செயலகம் இருந்த கோவாவிற்குக் கொண்டு சென்று சிறையில் அடைத்தனர். இத்துடன் 1619 இல் யாழ்ப்பாண இராச்சியம் முழுமையாகப் போர்த்துக்கீசர் வசமாகியது.

(தொடரும்)



# ஆன்மீகம்

## முன்னேற்றத்திற்கு முதற்படி!



வளர வேண்டும். ஒளிர வேண்டும். வாழ்வில் முன்னேற வேண்டும் என்கிற எண்ணம் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இயல்பாகவே ஊற்றெடுத்த வண்ணம் உள்ளது. 'நாளும் நாளும் வளர்வதோர் நீர்மையால்' என்று தேவாரம் தெரிவிக்கின்றது.

முன்னேற வேண்டும் என்கிற எண்ணம் முதற்பிறை போல! திசை அறிந்து அளவான அடியெடுத்து அம்முன்னேற்றத்தை அடைவது முழு நிலவைப் போல.

'பிறைச் சந்திரனே!
குறைப்பட்டுக் கொள்ளாதே!
உன்னுள் தான்
பூரணச் சந்திரன்
புதைந்து கிடக்கிறான்!'

என்கின்றார் கவிஞர் இக்பால்.

சரி! முன்னேற்றத்திற்கு முறையான வழிகாட்டுவது எது?

இப்பிறப்பில் மட்டும் அல்ல. இனி நீ எடுக்க உள்ள பிறப்புகளிலும் கல்வி அறிவுதான் உன்னைக் காக்கும் என்கிறார் வள்ளுவப் பேராசான்.

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து'

வாழைத்தண்டை இரு கூறுகளாகப் பகுத்த பின்பும் வெட்டுப்பட்ட இருதுண்டுகளுக்கும் இடையே இழையோட்டம் நீடிப்பதைப்போல ஒரு பிறப்பு நீங்கி வேறு மனிதராகப் பிறந்தாலும் முந்தைய பிறப்பில் பெற்ற அறிவுச்செல்வம் அழியாது என்கிறார் வள்ளுவர்.

சின்னஞ்சிறுவர் பலர் மாபெரும் சாதனையாளராக விளங்குவதற்கும் கருவிலே திருவுடையார் என நாம் சொல்வதற்கும் காரணம் இதுவே.

அழிவில்லாததும் சிறப்பு உடையதுமான கல்வியைக் 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்கிறார் வள்ளுவர். எனவே படி! படி! படி! என்பதுதான் முன்னேற்றத்திற்கான முதற்படி! பரந்த கடலில் பயணப்படும் கப்பல்களை கலங்கரை விளக்கத்தின் ஒளி பாதை காட்டி ஊர் சேர்ப்பது போல வாழ்க்கைப் பிரச்சினைகளிலே சிக்கிவாடும் மனிதனுக்கு உந்துதலையும் உற்சாகத்தையும் ஊட்டி வழ்காட்டுபவை உயரிய புத்தகங்கள் தான்.

ஆம் நல்ல நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து நாளும் நாளும் படிப்பதே நம்மைப் பூரண நிலவாகப் பொலியச்செய்யும்.

'ஆதி இலக்கிய நூல்கள் - அவை
ஆழ்கடல் நீந்தும் கலங்கள்!
நீதி இலக்கிய நூல்கள் - அவை
நேர்வழி காட்டிடும் கைகள்!
சாதி இலக்கிய நூல்கள் - அவை
சாக்கடை நீரின் புழுக்கள்!
வீதி இலக்கிய நூல்கள் - சுக
வேட்டையில் தோன்றிடும் நோய்கள்!'

என்கிறார் உவமைக்கவிஞர் சுரதா.

கற்க வேண்டும். கசடற கற்க வேண்டும். கற்பவை நிற்க வேண்டும் என்கிறது குறள். படிக்கத் தகுந்தவையான வற்றைப் படிப்பதற்கே நாம் நேரத்தைச் செலவிட வேண்டும். ஏனென்றால் நம்மால் திரும்பப்பெற முடியாத சில மணித்துளிகளையே புத்தகம் படிப்பதற்காக நாம் ஒதுக்குகிறோம். பதிலுக்கு அந்தப் புத்தகம் நமக்குத் தருவது பாரமாக இருக்கலாமா? அபாரமாக அல்லவா அமைய வேண்டும்!

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் உயரிய குறிக்கோள் ஒன்று உருவாவதற்கும் அந்த இலட்சியத்தை நோக்கி அவர்கள் நடைபோடவும் அடிப்படையாக அமைவதே அறிஞர்களின் புத்தகங்கள். அவை அனுபவத்தின் வித்தகங்கள்.

ஓவியக்கோழி உதயத்தில் கூவுமா? சித்திரத்தில் உள்ள மயில் சிறகை விரிக்குமா? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா?

ஆனால் கறிக்கு உதவுகிற ஏட்டுச் சுரைக்காய்கள்தான் சான்றோர்களின் தன்னிகரற்ற புத்தகங்கள். வாழ்க்கை வரலாறுகள் அந்நூல்களுக்கு மட்டும் என்ன அப்படி ஒரு அபாரமான ஆற்றல் என்றால் அவை அனைத்தும் அனுபவப் பிழிவுகள்.

பலநூறு ஆண்டுகள் மண்ணுக்குள் புதைந்து வைரமாய் ஒளிரும் நிலக்கரித்துண்டுகள் வாழ்க்கைப் பாதையில் வருந்தி இடர்ப்பட்ட போது கிடைத்த படிப்பினைகள், பாடங்கள், பின்பக்குவம் அடைந்தபோது பெற்ற பாராட்டுகள், பரிசுகள்.

(தொடரும்)

## முகக்கவசமின்றி நடமாடிய 2658 பேர் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

இலங்கையில் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்த தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பொது இடங்களில் முகக் கவசம் இன்றி நடமாடிய 2658 பேர் இதுவரையில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 6 மணி வரையுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 1,441 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே பொது இடங்களில் முகக்கவசங்கள் இன்றி நடமாடிய 1217 பேர் தனிமைப் படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் மொத்தமாக தற்போது 2658 பேர் இதுவரையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 39 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட நிலையில், கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் விசேட கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## நயினை நாகபூஷணிக்கு இன்று 12 ஆம் திருவிழா



### உற்சவம் காண்கின்றாள் உத்தரத்தின் தேவி!

சப்த சமுத்திரங்கள் சேலையாக
காள நாகங்கள் அணிகளாக
கருக்கொண்ட மேகங்கள் கூந்தலாகி
ருதுவான கயல்கள் கண்களாகி
நித்திலம் சிந்திடும் பொன்நில நயினையில்
மத்தளம் ஒலித்திடும் மாணிக்க திருத்தலம்தனில்
ஐந்தலை நாகமே பொன்னூஞ்சலெனவாக
காற்றலை தென்றலே வடம்தனை தொட்டாட்ட
கொதித்திடும் தீங்கில் உலகை காத்திடவெனவே
கொற்றவையவளாம் நாபூஷணியம்மை
இத்துயர் துடைக்கவே உற்சவம் காண்கின்றாள்.

வட.கோவை:கோ.லிந்தா.

### அருள்புரிந்து காத்திடம்மா!

தஞ்சமென உனைநான் சரணடைந்திட்டேன்
தாயே எனைக் காத்திட மனமில்லையோ!
பிஞ்சு மனம் நோகாது மனமிரங்கி அருளாயோ!
பிதற்றும் ஒலி உன் காதுகட்குள் விளவில்லையோ!
நெஞ்சம் கனக்குதே நீ ஓடி வரமாட்டாயா!
நெடுநாள் படும் தொல்லை
அகற்றெறிந்து விட்டுடம்மா!
அஞ்சுகமே அலைகடல் நடுவே வீற்றிருக்கும்
ஆதிசக்தியே! நாகபூஷணியே!
அருள்புரிந்து காத்திடம்மா!

பொ.புவிதன் வரியப்புலம்.

### நயினை நாகம்மாள்

அகர உயிரெல்லாம் அம்மா உன்னடியில்
நிகரில் அருள்வேண்டி நிற்குதம்மா

அலைகடல் திரையெறிந்து ஆர்ப்பரித்து நிற்க
கலைமலி திருக்கோவில் காணுநாளென் நானே!

மலையெனத் துயர்வளர வாழ்வழிக்கும் பிணிதீர்த்து
தலையெடுத்து நாம்வாழ தயவுநீ புரியாயோ

தேரோடும் வீதியிலே திரண்டு வந்து புரள்வதற்கு
பாராளும் பராபரையே பார்வதியே அருளுமம்மா!

நயினை சபாமணி.

### வித்தகத்தைத் தந்திடம்மா!

கட லலையின் நடுவினிலே
கால மெலாம் வீற்றிருந்து
திடமான தீர் வதனைத்
தீவ தனுக் கீந்திடம்மா!

எழில் கொஞ்சும் நயினையிலே
ஏந்திழையே உன் னருளால்
களமாடி வழுத்து தற்குக்
காரிருளைக் களைந் திடம்மா!

காலைக் கதி ரொளியாய் (க்)
காசினி யையே புரந்து
சாலை வழியே வந்து
சஞ்சலங்கள் தீர்த் திடம்மா!

செழிப்பதனைச் செக மெங்கும்
செப்பனிட்டு வடி வமைத்து
விழிப்புடனே யெமைக் காத்து
வித்தகத்தைத் தந்திடம்மா!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

# கடலில் பிளாஸ்ரிக் கழிவுகள்; இலங்கை 5ம் இடத்தில்



(கொழும்பு)

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுச்சூழலுக்கான கேந்திர மையம் தெரிவித்துள்ளது.

அண்மையில் கல்கிஸை கடற்கரை கழிவுகளால் நிரப்பப்பட்டுள்ளமை தொடர்பில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலும் குறித்த கோரிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளதாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார். இலங்கையில் இது பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

கடலிலும், கங்கைகளிலும் பிளாஸ்டிக் பொருட்கள் காணப்படுகின்றன. கடலில் பிளாஸ்டிக் பொருட்களை கொட்டும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 5 ஆவது இடத்தில் உள்ளதாக உலக வங்கியால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அரசாங்கம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் கல்கிஸை கடற்கரை கழிவுகளால் நிரப்பப்பட்டுள்ளமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் தாம் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு நீதிமன்றம் ஊடாக சிறந்த தீர்வு கிடைக்கும் என தாம் எதிர்பார்ப்பதாக சுற்றுச்சூழலுக்கான கேந்திர மையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார். (2-8)

# நிதி மற்றும் லீசிங் மோசடிகள் குறித்து 60 முறைப்பாடுகள்

(கொழும்பு)

நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களின் மோசடிகள் தொடர்பில் 60 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அது குறித்து ஆராயும் குழு தெரிவித்துள்ளது.

இதில் பெரும்பாலானவை தனிநபர் முறைப்பாடுகள் எனவும் குழு கூறியுள்ளது. வட்டி தொடர்பிலான முறைகேடுகள், மீண்டும் கையகப்படுத்துதல், சட்ட விரோதமாக லீசிங் மற்றும் நிதி நிறுவனங்களை நடத்திச் செல்லல் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மோசடிகள் தொடர்பில் ஆராயும் குழுவினால் முறைகேடுகளை ஏற்கும் நடவடிக்கைகள் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

இதன் அறிக்கை இன்று மத்திய வங்கி ஆளுநரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களின் மோசடிகள் தொடர்பில் ஆராயும் மூவரடங்கிய குழு தெரிவித்துள்ளது.

நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களின் மோசடிகள் குறித்து ஆராய்ந்து பார்த்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஸ்மனால் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-8)

# மலேரியா நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்

(கொழும்பு)

நாட்டில் கடந்த வாரம் மாத்திரம் மூன்று மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதற்கமைய இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதி வரையில் 13 பேர் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய மலேரியா ஒழிப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் அடையாளம் காணப்பட்ட மலேரியா நோயாளர்கள் மூன்று பேரில் ஒருவர் தம்புள்ள - பெல்வெஹெர தனிமைப்படுத்தல் நிலையத்தில் இனங்காணப்பட்டார்.

இரத்தினபுரி பகுதியை சேர்ந்த குறித்த நபர், மடகஸ்காரில் இருந்து நாடு திரும்பி தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர் தற்போது தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக தேசிய மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் பணிப்பாளர், மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.



ஏனைய இரண்டு மலேரியா நோயாளர்களும் தம்பதிவ யாத்திரை சென்று நாடு திரும்பியவர்கள் என்பதுடன் அவர்கள் இவ்வாறு மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. குறித்த இருவரும் இரத்தினபுரி, கலவானை மற்றும் மொனராகலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இலங்கையில் தற்போது மலேரியா நோய் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ள நிலையில் ஆபிரிக்க நாடுகள் மற்றும் குறிப்பாக இந்தியாவில் இருந்து வருகை தரும் நபர்களே மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் பணிப்பாளர், மருத்துவர் பிரசாத்ரணவீர சுட்டிக்காட்டியுள்ளார்.(2-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நான் மட்டும் நல்லவன்

ஒரு பெரியவர் வெளிநாட்டிலே கேள்விப்பட்ட கதை இது. ஜான்சன் என்று ஒரு ஆள்.. அவன் ஒரு நாள் தன்னுடைய நண்பர்களுடன் சீட்டு ஆடிக் கொண்டிருந்தான்.

அவன் தன்னிடம் இருந்த எல்லா பணத்தையும் சீட்டாத்திலே தோற்றுவிட்டான்.கையிலே மிச்சம் எதுவும் இல்லை.அடுத்த நாள் வரைக்கும் சாப்பிடுவதற்கு என்ன செய்வது? அதற்கும் வழியில்லை.

இவன் யோசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கேயிருந்த இவனுடைய நண்பன் பிரவுன்... இவனிடம் வந்து... " கவலைப்படாதே... நாளைக்கு வரைக்கும் உன் செலவுக்கு... நான் பணம் தருகிறேன்... இந்தா இதை வைத்துக் கொள்!" என்று சொல்லி ஒரு இருபது டொலர் நோட்டை அவனிடம் கொடுத்தான்.

ஜான்சன் அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போகிறான். அப்படி போய்க்கொண்டிருக்கும் பொழுது வழியிலே வறுமையால் கஷ்டப்படுகின்ற ஒரு பெண்ணைப் பார்த்தான். அழுக்கு உடை, சரியாக நடக்கக் கூட முடியவில்லை அந்தப் பெண்ணாலே.

"ஐயா... நான் இன்றைக்கு நாள் முழுவதும் சாப்பிடவில்லை. பட்டினி... நீங்கள் எனக்கு உதவி செய்யவில்லை என்றால் ஆற்றிலே விழுந்து இறந்து போய்விடுவேன்"என்றாள்.

ஜான்சன் இரக்கமுள்ளவன். அவன் மனது மிகவும் வருத்தப்பட்டது அவளுடைய நிலைமையைப் பார்த்து "கவலைப்படாதேயம்மா ... என்னிடம் இருபது டொலர் இருக்கின்றது... இதை நீ வைத்துக் கொள். இந்தா"என்று சொல்லி தன்னிடம் இருந்த இருபது டொலர் நோட்டை அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டான்.

அவள் இந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு இவனை மிகவும் நன்றியோடு பார்த்தாள்.

"ஐயா... மனித குலத்தின் மீது எனக்கு இருந்த நம்பிக்கை செத்துப் போய்விட்டது... அந்த நம்பிக்கைக்கு இப்போது நீங்கள் உயிர் கொடுத்து விட்டீர்கள்... உங்கள் கருணையை நான் எப்பவும் மறக்க மாட்டேன்" என்று சொல்லி விட்டு அவள் போய்விட்டாள்.

இவன் மனது மிகவும் நிறைவாக இருந்தது. நமக்கு இன்றைக்கு சாப்பிடுவதற்கு ஒன்றும் இல்லை என்றால் கூட ஆற்றிலே விழுந்து இறக்க இருந்த ஒரு பெண்ணைக் காப்பாற்றியிருக்கிறோம் என்ற நினைப்பிலே அவனுக்கு பசி கூட தெரியவில்லை. அவன் திருப்தியாக போனான். அன்றைக்கு எதுவும் சாப்பிடவில்லை.. பேசாமல் படுத்துக் கொண்டான்.மறு நாள் காலையில் நிம்மதியாக எழுந்து கொண்டான். வாசலிலே தினசரி பேப்பர் வந்து கிடந்தது.எடுத்துப் பார்த்தான். முதல் பக்கத்திலே ஒரு செய்தி.

" ஆற்றிலே அடையாளம் தெரியாத ஒரு பெண்ணின் உடல் கண்டெடுக்கப்பட்டது" என்று போட்டிருந்தது. அதற்குக் கீழே போட்டிருந்த விபரங்களெல்லாம் படித்துப் பார்த்தான்.நேற்று அவன் சந்தித்த அதே பெண் என்பதை புரிந்து கொண்டான். அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

" என்ன ஆச்சு. நேற்று பணம் இல்லாததால் தானே ஆற்றில் விழுந்து இறந்து போகிறேன் என்று சொன்னாள். நாம்தான் உடனே இருபது டொலர் கொடுத்தோமே. பணம் இருந்தும் அவள் எதற்காக இறந்து போனாள்.. மனித குலத்தின் மேல் நம்பிக்கை இன்னும் இருக்கு..."என்று வேறு சொன்னாள்.

இவன் யோசித்தான். ஒன்றும் புரியவில்லை.

மறுநாள் மறுபடியும் அந்த சூதாட்ட விடுதியிலே சீட்டாடிக் கொண்டிருந்தான்.சாப்பாட்டு நேரத்திலே... முதல் நாள் பணம் கொடுத்து உதவி செய்தானே பிரவுன்... அவன் கேட்டான் இவனைப் பார்த்து.

" ஏன்டா ... நேற்று எங்களை விட்டுப் போனதும் நீ என்ன செய்தாய்? " என்று கேட்டான்." என்ன செய்தேன்... வீட்டுக்குப் போனேன். " என்றான் . இவன்." நான் கொடுத்த பணத்தை ஏதாவது செலவு செய்தாயா? " என்றான்." இல்லையே... ஏன் ? "என்றான்.

நல்ல வேளை ... நான் கொடுத்த 20 டொலர் நோட்டை நீ செலவு செய்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று நாங்கள் ஆச்சரியப்பட்டோம். ஏனென்றால் நான் உன்னிடம் கொடுத்தது கள்ளநோட்டு". என்றான் அந்த நண்பன். இது தான் அந்தப் பெரியவர் (ஓஸோ) கேள்விப்பட்ட கதை. எதற்கு இதைச் சொல்கின்றேன் என்றால் " இந்த உலகம் ஊழல்மயமானது.நாமும் இந்த ஊழலுக்கு உட்பட்டுத்தான் ஆக வேண்டியிருக்கு" என்பதை விளக்குவதற்காகத்தான். உயர்வான எண்ணங்கள் தான் எங்களைக் காப்பாற்றும்.நான் மட்டும் நல்லவனாக இருந்துவிட்டால் போதும்.நாம் செய்வதெல்லாம் நன்மையாக முடியும் என்பது இன்றைய உலகில் சாத்தியமில்லை.

ஒரு ஆள் சொன்னான் "என்றைக்கும் சொந்தக் காலில் நிற்பது தான் சேர் நமக்குக் கௌரவம் சுய தொழில் செய்ய வேண்டும். அரசாங்கத்தை எதிர்பார்க்கக் கூடாது என்பது என்னுடைய லட்சியம்" அதனால் தான் சுயமாக ஒரு தொழிலை ஆரம்பித்தேன். கைது செய்து ஜெயிலில் போட்டுவிட்டார்கள் சேர்.. என்றான். என்னடா செய்தாய் என்று கேட்டேன்.அவன் மெதுவாக " கள்ள நோட்டு அடித்தேன் "என்றான்.

# சவால்களை இலகுவாக முறியடிக்க ஜனாதிபதியால் மட்டுமே முடியும்

## விமல் வீரவன்ச புகழாரம்



(கொழும்பு)

கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்த முடிந்த ஜனாதிபதிக்கு ஏனைய சவால்களைகளை இலகுவாக முறியடிக்க முடியுமென அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் விமல் வீரவன்ச மேலும் கூறியுள்ளதாவது, "நாட்டில் கொரோனாவினால் 11 பேர் உயிரிழந்துள்ளனர். அதில் ஒருவரின் மரணம் மாத்திரமே சந்தேகத்திற்கிடமாக காணப்படுகின்றது.

அத்வது 10 பேர் வெளிநாட்டில் இருந்து கொரோனாத் தொற்றுடன் வருகை தந்திருந்தவர்களே உயிரிழந்தனர்.

எமது நாட்டில் உள்ளவர்கள் கொரோனாத் தொற்று ஏற்பட்டு எவரும் மரணிக்கவில்லை என்பது உலக சாதனையாகும்.

அதேபோன்று கடற்படையில் ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தபோதிலும் எவருக்கும் உயிராபத்து இருக்கவில்லை.

இவைகள் அனைத்துக்கும் ஜனாதிபதி முன்னெடுத்த செயற்பாடுகளே காரணமாகும். அதாவது நாடாளுமன்ற அதிகாரமின்றியே கொரோனாத் தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார். அதேபோன்று எம்.சி.சி ஒப்பந்தம் உட்பட ஏனைய சவால்களையும் ஜனாதிபதி இலகுவாக வெற்றிகொள்வார்.

எனினும் இவற்றை மாற்றியமைக்க பலமான நாடாளுமன்ற அதிகாரம் தேவைப்படுகிறது. அத்துடன் கடந்த தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களிக்காத தரப்பினர் கூட இம்முறை மொட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்க தீர்மானித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் 6ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

அனைத்து சிறுவர் பராமரிப்பு நிலையங்களையும் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் மீண்டும் திறப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த தினத்தில் சுகாதார அமைச்சு வழங்கியுள்ள ஆலோசனைகள் மற்றும் வரையறைகளுக்கு அமைய சிறுவர் பராமரிப்பு நிலையங்களை திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் காரணமாக ஆரம்பப் பாடசாலைகள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பாடசாலைகளும் கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக மூடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இன்று முதல் அனைத்து சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் மீண்டும் திறக்கப்பட உள்ளதாக முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இதற்கான ஆலோசனைகளை உரிய தரப்பினர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருந்தது.

இருப்பினும் எதிர்வரும் 6 ஆம் திகதி முதலே நாட்டில் உள்ள அனைத்து சிறுவர் பராமரிப்பு நிலையங்களையும் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2-8)

# கடலில் தத்தளித்த இந்திய மீனவர்களை மீட்ட இலங்கை கடற்படையினர்



(கொழும்பு)

விசைப்படகு பழுதானதால் கடந்த இரண்டு நாட்களாக நடுக்கடலில் தத்தளித்த நான்கு இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்குப் பின்னர் பழுதான விசைப்படகுடன் மீனவர்கள் நால்வரையும் இந்திய கடலோர காவல் படையினரிடம் ஒப்படைத்தனர்.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் கடந்த சனிக்கிழமை காலை இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்க கடலுக்குள் சென்றனர்.

மீனவர்கள் சனிக்கிழமை இரவு நடுக்கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்தபோது விசைப்படகின் இஞ்சினில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு படகு நடுக்கடலில் பழுதாகியது.

இதனால் படகிலிருந்த மீனவர்கள் கரைக்குத் திரும்ப முடியாமல் நடுக்கடலில் தத்தளித்துள்ளனர். இதனையடுத்து விசைப்படகு கடல் சீற்றம் காரணமாக இலங்கையின் மன்னார் கடல் பகுதிக்குள் சென்றது.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை அவ்வழியாக ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களையும் படகையும் மீட்டு சர்வதேச கடல் எல்லையில் வைத்து விசாரணை நடத்தினர்.

அதன்பின்னர் இந்தியக் கடலோர காவல் படையினர் மீனவர்களையும் விசைப்படகையும் ஒப்படைத்தனர். (2-281)

# செய்தித்துளிகள்

## மலேசியாவில் சிக்கியிருந்த 150 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமான மலேசியாவில் சிக்கியிருந்த 150 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர். ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானம் ஒன்றின் மூலம் குறித்த நபர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்கள் அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (2)

## தபால்மூல வாக்குச் சீட்டுகள் விநியோகிக்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

2020 பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகியது. இதற்கமைய தபால்மூல வாக்குச் சீட்டுகள் அடங்கிய ஆவணங்கள் நாடளாவிய ரீதியிலுள்ள தெரிவத்தாட்சி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இம்முறை இடம்பெறவுள்ள தேர்தலில் தபால்மூல வாக்களிப்பிற்காக 7 இலட்சத்து 5 ஆயிரத்து 85 பேர் தகுதி பெற்றுள்ளனர். அதேநேரம் 47 ஆயிரத்து 430 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 14, 15, 16, 17 மற்றும் 20, 21 ஆம் திகதிகளில் தபால்மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## வேலை நிறுத்தத்திற்கு தயாராகும் துறைமுகப் பிரிவினர்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் நிறுவுவதற்காக கொண்டுவரப்பட்டுள்ள கிரேன்கள் நிறுவப்படவில்லையாயின் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக இலங்கை சுதந்திர ஊழியர் சங்கத்தின் துறைமுக பிரிவினர் தெரிவித்துள்ளனர். வெளிநாட்டு தலையீடு காரணமாக குறித்த கிரேன்கள் நிறுவப்படாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2)


## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | ஜனுவளு | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 40 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 140 | 150 | 240 |
| தக்காளி | 250 | 200 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 110 | 100 |
| கோவா | 160 | 130 | 130 | 120 |
| கரட் | 140 | 170 | 180 | 200 |
| பூசணி | 50 | 35 | 40 | 60 |
| புடோல் | 80 | 70 | 60 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 250 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 75 | 80 | 80 |
| பாகற்காய் | 250 | 200 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 100 | 120 |
| பயற்றங்காய் | 180 | 200 | 150 | 100 |
| லீக்ஸ் | 140 | 150 | 120 | 140 |
| பீற்றூட் | 100 | 120 | 80 | 120 |
| கறிமிளகாய் | 150 | 200 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 280 | 200 |
| போஞ்சி | 200 | 140 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | -- | 60 |
| கீரை – 1 பிடி | 40 | 25 | 30 | 20 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 300 | 300 | 280 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 240 | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 40 | 80 |

# பொது அறிவுத் தகவல்கள்


1. இந்தியா மயிலை தேசியப்பறவையாக அறிவித்த ஆண்டு எது ?
   1964
2. பன்றியின் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயார் செய்யப்போகும் நாடு எது ?
   தாய்லாந்து
3. வயிறும் ஜீரண உறுப்பும் இல்லாத உயிரி எது ?
   ஈசல்
4. நின்றபடியே தூங்கும் பிராணி எது ?
   குதிரை
5. இந்திய மக்களின் முக்கிய உணவுப்பொருள் எது?
   அரிசி
6. வண்டல் மண் எதன் படிவுகளால் ஏற்படுகிறது ?
   ஆறுகள்
7. விவசாய உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் மாநிலம் எது ?
   பஞ்சாப்
8. உலகிலுள்ள இயற்கை பிரிவுகள் எத்தனை ?
   9 பிரிவுகள்
9. சூரியனின் வயது ?
   500 கோடி ஆண்டுகள்
10. பிரமிடுகளின் பிறப்பிடம் எது ?
    எகிப்து.

## உருவிலுள்ள 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## புள்ளிக் கோட்டினை இணைக்குக






# அகத்தின் அழகு முகத்தில் தெரியும்





புத்த சமயத்தைச் சேர்ந்த ஜப்பானிய துறவி ஒருவர், ஒரு கிராமத்திற்குச் சென்றார். கிராம வாசிகள் அவரை சூழ்ந்து கொண்டு தங்களின் கோரிக்கைகளை தெரிவித்தபடி எப்படியாவது தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு கெஞ்சினர். கவலைகள் தீர்ந்தால் வாழ்க்கையில் நிம்மதி கிடைக்கும் என்று துறவியிடம் கூறினர்.

துறவி அவர்களின் வேண்டுகோளைக் கேட்டுவிட்டு சற்று நேரம் மௌனமாக இருந்தார். மறுநாள் அனைத்து கிராம வாசிகளுக்கும் கேட்கும்படியான ஒரு தெய்வீகக் குரல் ஒலித்தது. அது யாதெனில் "நாளை மதியம் ஒரு அதிசயம் இக்கிராமத்தில் நடைபெறவுள்ளது. உங்கள் பிரச்சினைகள் அனைத்தையும் ஒரு கற்பனை சாக்குப் பையில் அடைத்து, ஊர் நதிக்கரையைத் தாண்டி மறுபுறம் விட்டுவிட்டு, அதே பையில் அவரவர்களுக்கு வேண்டியதை கொண்டு வரலாம், அதாவது தங்கமோ, வெள்ளியோ, உணவோ, பொருளோ எது வேண்டுமானாலும் இருக்கலாம். அவ்வாறு செய்தால் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேறும்."

இந்த தெய்வீகக் குரல் உண்மையாக இருக்குமா? என்ற சந்தேகம் கிராம வாசிகளுக்கு ஏற்பட்டது. எனினும், குரலுக்கு கட்டுப்பட்டு நட்டம் ஏதும் வராது என்ற நம்பிக்கையுடன், குரலின் சொற்படி நடந்து கொள்ள தீர்மானித்தனர். உண்மையாக இருந்தால் கோரிக்கைகள் நிறைவேறும். இல்லாவிட்டால் நட்டம் ஒன்றுமில்லை என்று கிராமத்தினர் நினைத்தார்கள்.

மறுநாள் மதியம், அனைவரும் கற்பனைப் பைகளில் நிரப்பிய கஷ்டங்களை நதியின் மறு கரையில் வைத்துவிட்டு, வேண்டியவற்றை அதே மாதிரி கற்பனையாக நிரப்பி வந்தனர். அவர்கள் திரும்பி வந்ததும் மிகவும் ஆச்சரியம் அடைந்தனர். ஏனெனில், தெய்வீகக் குரலின்படி அவரவர் கேட்டது அவரவருக்குக் கிடைத்தது. அவர்களின் இன்பத்திற்கு எல்லையே இல்லை.

ஐயோ பரிதாபம்!!! இந்த மகிழ்ச்சி நீண்ட நாட்கள் நிலைக்கவில்லை. மற்றவர்களுடன் தங்களை ஒப்பிட்டு, அவர்களுக்கு நன்றாக கிடைத்துள்ளதாகவும் தங்களுக்கு அவ்வாறு கிடைக்கவில்லையே என்று வருந்தினர்.

"நான் ஒரு சாதாரண சங்கிலி கேட்டேன். ஆனால் அடுத்த வீட்டுப் பெண் தங்க ஆபரணம் கேட்டு அவளுக்கு கிடைத்து விட்டது. நான் ஒரு வீடு கேட்டேன். ஆனால் எதிர் வீட்டு மனிதன் ஒரு அரண்மனையைக் கேட்டு அவனுக்கு அது கிடைத்து விட்டது. நாமும் அப்படிப்பட்ட விடயங்களைக் கேட்டிருக்க வேண்டும். இப்படி ஒரு பொன்னான வாய்ப்பை நழுவ விட்டு விட்டோமே!" என்று யோசித்தனர்.

இப்படிப்பட்ட எண்ணங்களுடன் மறுபடியும் கிராம வாசிகள் துறவியிடம் சென்று தங்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்தினர். மறுபடியும் ஏமாற்றத்துடனும், மனக் குறைவுகளுடனும் வாழ ஆரம்பித்தனர்.

பிரச்சினைகள் இருந்தால் சந்தோசம் இருக்காது என்று பலர் நினைக்கிறார்கள். இரண்டையும் ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தக் கூடாது. வாழ்க்கையில் துன்பங்கள் நிறைந்திருக்கும். அவற்றை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, இன்பமாக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டாம் என்பது நோக்கம் இல்லை.

பகவான் கிருஷ்ணருக்கு இல்லாத பிரச்சினைகளா? அவருடைய தாய் மாமன் கம்சன், கிருஷ்ணர் பிறப்பதற்கு முன்பே அவரை கொல்ல எண்ணினான். பாரத போரில் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு சாரதியாக இருந்தார். அர்ஜுனன் அவருக்கு கொடுத்த பிரச்சினைகள் கொஞ்சமா? கடைசி நிமிடத்தில் அஸ்த்ரங்களை கீழே போட்டுவிட்டு யுத்தத்தில் போராட மறுத்தார். குருக்ஷேத்ரத்தில் ஒவ்வொரு நாளும் பல வித பிரச்சினைகள். அர்ஜுனன் மீது தொடுக்கப்பட்ட ஒவ்வொரு அம்பும் கிருஷ்ணரை வந்தடைந்தன. ஆனாலும் அவர் புன்சிரிப்போடு தென்பட்டார்.

பகவான் கிருஷ்ணர் பகவத் கீதையில் சொல்லியிருப்பது என்னவென்றால்-"சுகம், துக்கம் இரண்டையுமே சமமாக கருத வேண்டும். நாணயத்தின் இரு பக்கங்கள் அவை. அதிலிருந்து இருக்கும் நன்மைகளைப் புரிந்து கொண்டால் சமாதானம் கிடைக்கும். அந்த சமாதானம் பேரானந்தத்தைக் கொடுக்கும்.

ஒவ்வொருவரின் மனப்பான்மை தான் முக்கியம். சந்தோசம் என்பது உள்ளுணர்விலிருந்து பிரதிபலிக்கும் உணர்வு.

# பழமொழிகள்

- எறும்பூரக் கல்லும் தேயும்.
- ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்.
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
- ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
- கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.

கொள்கையில் நம்பிக்கை இருக்க வேண்டியது தான் அது குருட்டுத்தனமாக இருக்கக்கூடாது.
- ஆவ்பரி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் பிரசாரம் எப்படியிருக்கும்

தேர்தல் என்றால் அதனைப் பெருந்திரு விழாவுக்கு ஒப்பிடுகின்ற வழமை உண்டு.

அதனால்தான் தேர்தல் திருவிழா என்று நம்மவர்கள் கூறி வைத்தனர்.

பொதுமக்களிடம் வாக்குக் கேட்டு வருகின்ற அரசியல்வாதிகளும் அவர் தம் ஆதரவாளர்களும் இருகரம் கூப்பிய வண்ணம் வாக்காளர்களை நாடித் தேடி வருவர்.

தமக்கு எதிரான கட்சிகளை தூற்றுவதிலும் விமர்சிப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பர்.

முன்பெல்லாம் தேர்தல் என்றால், மாபெரும் பொதுக்கூட்டம் நடக்கும். அடைமொழிகளுடன் அரசியல்வாதிகள் அரங்கேறுவர்.

இடையிடையே ஆதரவாளர்கள் கரகோசம் செய்வர். கட்சிக் கொடிகள் பறக்கும்.

பிரசார உரைகள் தீச்சுவாலையாய் எதிர்த்தரப்பைச் சுட்டெரிக்கும்.

எனினும் தற்போது கொரோனாவின் புண்ணியத்தால் பொதுக்கூட்டம், மேடை அலங்காரம் ஏதும் இல்லை.

வாய்பொத்தி மௌனியாய் இரு என்பது போல முகக் கவசம் அணிந்து கொள்கின்ற அளவில் சமகால நிலைமை உள்ளது.

எதுவாயினும் வாக்காளர்களைத் தம் வசம் ஈர்ப்பதற்காக அரசியல்வாதிகள் வார்த்தை அலங்கரிப்புக்களை, உணர்ச்சிமிகு உரைகளைக் கொட்டிக் குவிப்பர்.

இந்த வகையில் நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் நம் தமிழ் அரசியல் களத்தில் பிரசாரம் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தோம். அந்தக் கற்பனையை உங்களோடு பகிரலாம்.

**கட்சி 1:** நாங்களே! தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள். சர்வதேசத்தின் உதவியுடனேயே அரசுடன் பேச்சு நடத்துவோம்.
நாங்கள் பாராளுமன்றத்தை ஆட்டிப் படைப்போம். மற்றவர்கள் மாற்று அணி என்று சொல்பவர்கள் பாராளுமன்றம் சென்று என்ன செய்யப் போகிறார்கள்.

**கட்சி 2:** பத்து வருடமாய் பாராளுமன்றத்தில் இருந்த நீங்கள் என்ன செய்தீர்கள். தமிழ் இனத்துக்காய் நீவிர் சாதித்தது என்ன?
அது சரி. சர்வதேசத்தின் உதவியுடனேயே அரசாங்கத்துடன் பேசுவோம் என்கிறீர்களே. அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்கு எந்த நாடு வருவதாக உங்களிடம் சொல்லி இருக்கிறது.
அல்லது உங்களை பேசுவதற்கு வாருங்கள் என்று இந்த அரசாங்கம் அழைப்பு விடுத்ததா என்ன?

**கட்சி 1:** எங்கள் அரசியல் கட்சி அலுவலகம் மீது நடந்த குண்டுத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். தேர்தல் நடப்பதற்கு முதல் நாள் திட்டமிட்டு இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
இதற்குத் தமிழ் மக்கள் தக்க பாடம் புகட்டுவர். இத்தகைய தாக்குதல்கள் எங்களுக்குப் புதிதல்ல.

**கட்சி 2:** ஒவ்வொரு தேர்தலுக்கும் புதுப்புது வியூகம். இந்த முறையும் கவுட்டு விட்டாங்கள். சீ. ஒரு டைனமற் செய்த வேலை.
*(இப்படி தங்களுக்குள் பேசிக் கொள்கின்றனர்.)*

கட்சி – 1 இன் அலுவலகம் மீது குண்டுத் தாக்குதல் இது ஊடகச் செய்தி.

# இ.ரி.ஐ. மற்றும் த பினான்ஸ் நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு நியாயம் வேண்டும்

## ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)
இ.ரி.ஐ. நிதி நிறுவனம் மற்றும் த பினான்ஸ் நிறுவனம் தொடர்பில் சட்ட ஆலோசனை பெற்ற வைப்பாளர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

இதன்படி, ஜனாதிபதி செயலகம், மத்திய வங்கி, திறைசேரி மற்றும் வைப்பாளர்களை பிரநிதித்துவப்படுத்தி குழுவொன்றை நியமிக்குமாறும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயுமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இ.ரி.ஐ. மற்றும் த பினான்ஸ் நிறுவனங்களின்வைப்பாளர்கள் தொடர்பில் மத்திய வங்கியின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலொன்றின் போதே, ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

அத்துடன், இ.ரி.ஐ. நிறுவனத்தின் கணக்கு விபரங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த நிறுவனம் மத்திய வங்கி தொடர்பில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. (2-8)

# இன்று முதல் யாழ்.,கிளிநொச்சியில் சஜித் தொடர் பிரசாரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று, தொடக்கம் நாளை மறு தினம் வரையில் யாழ். மற்றும் கிளிநொச்சியில் தொடர் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார்.

இன்று முதலாம் திகதி சாவகச்சேரியில் மதியம் 2 மணி தொடக்கம் 2.45 மணி வரையில் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

அதைத் தொடர்ந்து, யாழ்.இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, கோப்பாய் பொன் செல்வ மஹால் மண்டபம், தாவடி வேத விநாயகர் விளையாட்டுக் கழகம் ஆகிய இடங்களில் பிரசார கூட்டங்கள் இடம் பெறவுள்ளன.

அதனை தொடர்ந்து நாளை 2ஆம் திகதி வட்டுக்கோட்டை வழக்கம்பரை அம்மன் கல்யாண மண்டபம், மானிப்பாய் பிரதேச சபை பொதுக்கூட்டம், சாவற்காடு மகாத்மா சனசமூக நிலையம், காங்கேசன் துறை இராஜேஸ்வரி மண்டபம், உடுப்பிட்டி சித்தி விநாயகர் கல்யாண மண்டபம், இராஜகிராமம்- நெல்லியடி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை அனுசா கல்யாண மண்டபம் ஆகிய இடங்களில் நடக்கும் பிரசார கூட்டங்களில் கலந்து கொள்வார். நாளை மறுதினம் 3 ஆம் திகதி கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடக்கும் பிரசார கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார். (2-4-8)

# பதவிக்காலம் முடிந்தும் வாகனங்கள் கையளிக்கவில்லை- விசாரணை ஆரம்பம்

## தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)
உத்தியோகபூர்வ வாகனங்களை இதுவரை கையளிக்காத முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள் நால்வர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏனைய இராஜாங்க அமைச்சர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர்களின் பதவிக் காலம் கடந்த மார்ச் 2 ஆம் திகதியுடன் நிறைடைந்துள்ளதால், உத்தியோகபூர்வ வாகனங்களையும் நிர்வாக உறுப்பினர்களையும் தம்வசம் வைத்திருப்பது சட்டத்திற்கு புறம்பானது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (2-8)

# பிரித்தானிய விசா விண்ணப்ப காரியாலய சேவைகள் ஆரம்பம்

(கொழும்பு)
கொழும்பில் அமைந்துள்ள பிரித்தானிய விசாவிற்கான விண்ணப்ப நிலையம் எதிர்வரும் 7 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிதாக விண்ணப்பம் செய்தல் உள்ளிட்ட விபரங்களை http://vfsglobal.co.uk/lk என்ற இணையத்தளத்திற்கு சென்று பார்வையிட முடியும் என பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

அத்தோடு விசா விண்ணப்ப நிலையத்திற்குள் நுழைவதற்கும் முன் அனுமதி அவசியம் என சுட்டிக்காட்டியுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் அவை இன்றி நிலையத்திற்குள் அனுமதிக்க முடியாது என்றும் அறிவித்துள்ளது. (2)

# தேர்தல் முடிவுகள் 6ஆம் திகதி மாலைக்குள்

(கொழும்பு)
நாடாளுமன்ற தேர்தலின் வாக்கெண்ணும் நடவடிக்கை ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் முதலாவது தேர்தல் முடிவு ஒகஸ்ட் 6 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-8)

## வாழ்வை பொன்னாக்கும் வைர வரிகள்

மிகச் சிறியவை என்று மக்கள் கருதும் செயல்களே மகான்களைத் தோற்றுவிக்க அடிப்படையாக உள்ளன. -தாமஸ் மன்றோ

## ஆன்மீகச் சிந்தனைகள்

### காப்பது அவர் கடமை

❖ துன்பமாகத் தோன்றுவது கூட அறியாமையே. கடவுள் அருளால் துன்பத்திலும் நன்மையே வரும்.

❖ உண்ணும் போது அவசரமோ, மிகுந்த நிதானமோ காட்டக் கூடாது. இயல்பாக சாப்பிட்டு எழுந்து விட வேண்டும்.

❖ செய்த பாவத்தை பிறரிடம் வருந்திச் சொல்வதால் அதன் கடுமை குறைந்து விடும்.

❖ இல்லை என்று மறுக்கும் நாத்திகரையும் காப்பது தான் கடவுளின் அருட்குணம்.

❖ எல்லாம் தெரிந்தவன், ஏதும் அறியாதவன் என்று யாரும் உலகில் இருப்பதில்லை

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## யாழ்ப்பாண கீரை வகை மூலிகைகளும் அவற்றின் மருத்துவ முக்கியத்துவங்களும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கரிசாலைக்கீரை

*Botanical Name- Eclipta prostrata*

கரிசலாங்கண்ணி கீரைச்சாறு எடுத்து அதிகாலையில் 30 மில்லி அளவு தொடர்ந்து 48 நாட்கள் எடுத்துவர பித்தப்பை கற்கள் கொஞ்சம் கொஞ்சமாக கரையும்.

கரிசலாங்கண்ணிக் கீரையை கடைந்து சாப்பிட்டு வர ஈரலை பலப்படுத்தும். இரத்தத்தில் ஈமோகுளோபின் அளவை அதிகரிக்கச் செய்யும்.

கரிசலாங்கண்ணி, பருப்புக்கீரை இரண்டையும் சேர்த்து கடைந்து சாப்பிட்டு வர நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

மலச்சிக்கல், மூல நோய் உள்ளவர்கள் 4 பங்கு கரிசலாங்கண்ணிச் சாற்றிற்கு, 2 பங்கு பசுநெய் சேர்த்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி கற்கண்டு சேர்த்து காலை, மாலை ஒரு தேக்கரண்டி அளவு உட்கொண்டு வர குணமாகும்.

இளநரை உள்ளவர்கள் கரிசலாங்கண்ணிக் கீரையை அடிக்கடி கடைந்து சாப்பிட்டு வர நல்ல பயனைக் கொடுக்கும்.

கொடிப்பசளைக் கீரை

*Botanical Name- Basella alba.*

கொடிப்பசளைக் கீரையை உளுந்து ஊற வைத்த நீரில் கடைந்து சாப்பிட்டால் வெள்ளை சாய்தல் குணமாகும்.

கொடிப்பசளைக் கீரை சாற்றில் பாதாம் பருப்பை ஊற வைத்து உலர்த்தி பொடியாக்கி தினமும் பாலில் கலந்து குடித்தால் தேக பலமும், நோயெதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும்.

பசளைக்கீரையை தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால் நீரிழிவு நோயால் ஏற்படும் உபாதைகளை குறைக்கும்.

பசளைக் கீரையுடன் வெள்ளைப் பூண்டு சேர்த்து வாரம் நான்கு முறை 3 மாதங்களுக்கு சாப்பிட்டால் தாது விருத்தி அடையும்.

சோற்றுடன் இக் கீரையை சேர்த்து சிறிதளவு நல்லெண்ணெய் விட்டு பிசைந்துண்ண இரத்தம் தூய்மையாகி தோல் நோய்கள் வராமல் தடுப்பதுடன் உடலை பலம் பெறச் செய்யும்.

இலைகளைப் பறித்து தூய்மையாக கழுவி அதனை வேக வைத்து உப்பு, மிளகாய், புளி, பருப்பு சேர்த்து கடைந்தும் உண்ணலாம்.

கொடிப்பசளை இலைகள் வெப்பத்தை தணிக்கும். சிறுநீரை நன்கு கழியச் செய்யும். சிறுநீர் எரிச்சலை போக்கும். இரத்த உற்பத்திக்கு உதவும். மலச்சிக்கலை போக்கும். சொறி,சிரங்கு போன்ற தோல் நோய்களுக்கும் நிவாரணம் தரக் கூடியது.




கரிசாலைக்கீரை



கொடிப் பசளி



வாத நாராயணன்



பருப்புக்கீரை

வாதநாராயணன்

*Botanical Name- Delonix alata*

வாதநோயிற்கும், மூட்டு வலிக்கும் சிறந்த கீரையாகும். வாரத்தில் இரண்டு நாட்கள் இக்கீரையைச் சமைத்துச் சாப்பிடலாம். இக்கீரையை முருங்கையிலையுடன் சேர்த்து நெய்யில் வறுத்துச் சாப்பிடலாம்.

வாதநாராயணன் கீரை ஒரு கைப்பிடி அளவு எடுத்து, உள்ளி 3 பல், சுண்டங்காய், பெருங்காயம், ஆமணக்கெண்ணெய் சேர்த்து வதக்கி அரைத்துச் சாப்பிட்டால் முடக்கு வாதம் குறைவடையும்.

வாதநாராயணன் கீரையுடன் உள்ளி சேர்த்து அவித்துச் சாப்பிட்டு வர வாயுப் பிரச்சினைகள் குணமாகும்.

பருப்புக்கீரை

*Botanical Name - Portulaca oleracea*

சத்துமிக்க கீரைகளுள் பருப்புக்கீரையும் ஒன்றாகும். இரும்புச்சத்து, தயமின், உயிர்ச்சத்து C, மகனீசியம், சோடியம், பொட்டாசியம், கரோட்டின் போன்ற சத்துக்கள் அதிகமுண்டு.

இக்கீரையை அடிக்கடி கடைந்து சாப்பிட்டு வந்தால் கல்லீரல் பலப்படும். மேலும் இக் கீரையை குழந்தைகளுக்குச் சமைத்துக் கொடுத்தால் குழந்தைகளில் ஏற்படும் வாய்ப்புண் ஆறும்.

இக் கீரையை தொடர்ந்து கடைந்து சாப்பிட்டு வர சிறுநீர் எரிச்சல் தணிந்து, சிறுநீர் நன்கு வெளிப்படும்.

மேற்கூறிய இலைக் கீரைகளைப் பயன்படுத்தி பொடி, ரசம், சூப் ,கூட்டு, அடை, துவையல், பச்சடி, சம்பல், அரையல் கஞ்சி போன்றனவாக தயாரித்து பயன்படுத்தலாம்.

எனவே எமது உணவுப் பழக்கவழக்கங்களைக் காலத்திற்கேற்ப சீரமைத்து பின்பற்றுவோமேயானால் நல்ல பல பாரம்பரிய உணவு முறைகள் மறைந்து போய் விடாமல் பாதுகாப்பதுடன் எமது ஆரோக்கியத்தை மேலும் நன்னிலையில் பேணி வளமுடன் வாழ முடியும்.

சித்த மருத்துவம் வலியுறுத்தும் "உணவே மருந்து" தத்துவமும் அதுவேயாகும்.

வாரத் தொடர்ச்சியாக குறிப்பிடப்பட்ட இலைக்கீரைகள் அனைத்தும் யாழ்.மாவட்டத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியவையே.

(முற்றும்)


## மதுவரி திணைக்களத்தின் தொழில்சார் பிரச்சினைகள் ஜனாதிபதியின் கவனத்திற்கு

(கொழும்பு)

மதுவரி திணைக்களம் நீண்டகாலமாக முகங்கொடுத்துவரும் தொழில்சார் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குவது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார்.

சேவைப் பிரமாணத்தை தயாரிக்கும் பணிகளை விரைவுபடுத்தவும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான பிரச்சினைகளுக்கு நிறுவன மட்டத்தில் தீர்வுகளை கண்டறிவதற்கும் ஜனாதிபதி பணிப்புரைவிடுத்தார்.

இலங்கை மதுவரி திணைக்களத்தின் தொழிற்சங்க கூட்டமைப்புடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.



பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் பயிலுநர்களைக் கொண்டு திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவது குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

நீண்டகாலமாக ஒரே பதவியில் சேவை செய்யும் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு முறைமையொன்றை அறிமுகப்படுத்தவும் கடமைகளை நிறைவேற்றும்போது பௌதீக வளப்பற்றாக்குறைக்கு தீர்வு வழங்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

கீழ்நிலை பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும்போது, திறமைகள் இல்லாத குறைந்த வருமானம் பெறுவோருக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (2)

## ஹெரோயினுடன்...

ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்வதற்கு குறித்த நபர் வருகை தருவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் குறித்தநபரினை 4.68 கிராம்ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,32)

## சர்வதேச நீதிமன்...

பஸ் நிலையத்துக்கு முன்னால், கவனயீர்ப்புப் போராட்டம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளால் நடத்தப்பட்டது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "எங்கள் உறவுகளுக்கான நீதி சர்வதேசம் நதியாகவே வழங்க வேண்டும்", "வடக்கு - கிழக்கில், தமிழருக்கு எதிராக நடத்தப்படும் இராணுவக் கெடுபிடிகளை உடன் நிறுத்து", "இலங்கையில், போர்க் குற்றம் செய்தவர்களை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்துங்கள்", "எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று உண்மையைச் சொல்", "வெள்ளை வானில கடத்தி செல்லப்பட்டவர்கள் எங்கே?", "சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்" ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (ம-3,299)

## கொரோனாவின்...

சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் செயலாளர் ஹரித்த அலுத்கே கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன, தேர்தல் நடைபெறவுள்ளது. இவ்வாறான சூழலில் இன்றும் சுகாதார பரிந்துரைகள் அடங்கிய வழிகாட்டி வர்த்தமானியில் வெளியிடப்படாமை பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொரோனாவின் இரண்டாவது அலை குறித்து உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட எச்சரிக்கையின் தீவிரத் தன்மை தொடர்பாக பரிசீலிக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-3)

## ஆயிரம் கோடி...

வாகலாம் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறினார்.

பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பை ஜூலை மாதம் 13, 14, 15, 16, 17ஆம் திகதிகளில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த திகதிகளில் வாக்களிக்க முடியாமற் போவோருக்கு ஜூலை 20, 21 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்குச் சீட்டுகளில் புள்ளடியிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, தேர்தல் சட்டத்தை மீறுகின்ற வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (ம-3)

## ஐ.நா ஆணை...

யாளர் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 44 ஆவது அமர்வில் மனித உரிமை ஆணையாளர் மிச்சேல் பச்லெட் தனது தொடக்க உரையில் இலங்கை குறித்து தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஐ.நா.மனித உரிமை பேரவையின் 44வது அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர், மனித உரிமைகள் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோயின் தாக்கத்திற்கு மத்தியில் இலங்கையில் முஸ்லிம் சமூகத்தினர் இலக்கு வைக்கப்படுவது கவலையளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக இலங்கையிலும் இந்தியாவிலும், முஸ்லிம் சமூகத்தினருக்கு களங்கம் ஏற்படுத்துவது, வெறுப்பு பேச்சுக்கள் மற்றும் அவர்களை COVID-19 உடன் தொடர்புபடுத்தி இலக்கு வைக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார். (ம-3)

## புதிய வகையான...

வைரஸ் காய்ச்சல் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்றிகளின் ஊடாக பரவும் இந்தக் காய்ச்சல் மனிதர்களுக்கும் தொற்றக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக சீன நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த புதிய வைரஸுக்கு G4 EA H1N1 என பெயரிடப்பட்டுள்ளது. நபரொருவரிடமிருந்து மற்றுமொருவருக்கு பரவக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதுடன், அவ்வாறு பரவும் பட்சத்தில் உலகளாவியரீதியில் இந்தத் தொற்று பரவக்கூடும் என நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ம-3)

### அரச மற்றும் தனியார் துறையினரின்

# அலுவலக நேரங்களை மாற்றப் பரிந்துரை

(கொழும்பு)

அரச மற்றும் தனியார் துறையின் அலுவலக நேரங்களைத் திருத்துவது தொடர்பான பரிந்துரைகள் ஆலோசனைக் குழுவால் அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அரச துறையினருக்கு காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணி வரையும் தனியார் துறையினருக்கு முற்பகல் 9.45 மணி தொடக்கம் மாலை 6.45 மணிவரையும் வேலை நேரமாக மாற்றியமைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர, அலுவலக நேரங்களை திருத்துவதற்கு அண்மையில் ஒரு குழுவை நியமித்தார்.

அதுதொடர்பான பரிந்துரை அறிக்கையை போக்குவரத்து அமைச்சின் செயலாளர் காமினி செனவிரத்ன நேற்று காலை அமைச்சர் அமரவீரவிடம் கையளித்தார்.

கொரோனா வைரஸ், போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், அரசு மற்றும் தனியார் துறைகளின் செயல்திறனை அதிகரிப்பதன் காரணமாக செயல்படுத்தப்படும் சமூக தூரத்தை பராமரிப்பதற்காக வேலை நேரங்களை திருத்துவதற்கான முன்மொழிவு முன்வைக்கப்பட்டது.

இந்த அறிக்கை பொது நிர்வாக அமைச்சிடமும் ஒப்படைக்கப்படும், அதே நேரத்தில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்படுத்துவது குறித்த முடிவு அந்த அமைச்சினால் எட்டப்படும் என்று அறியப்படுகிறது. (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## போத்...

நிலையில்,பலஆயிரம் கோடி ரூபாய் சொத்துக்களை வைத்துள்ள போத்தீஸ் கடை உரிமையாளரும் மரணமடைந்துள்ளார். (ம-3)

## கொரோ...

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2047ஆக அதிகரித்துள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்டுள்ள 5 பேர் ஓமான் நாட்டில் இருந்து தாயகம் திரும்பியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 31ம் நாள் நீங்காத் துயரில்



எமது புலோலி கமநல சேவைகள் நிலையத்தில் கடமையாற்றுகின்ற **திரு. தெ. அனுரதன்** அவர்களின் பாசமிகு தந்தையாரான

அமரர்

**பத்மநாதன் தெய்வேந்திரன்**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-9806) புலோலி கமநல சேவைகள் நிலைய சமூகம்


கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் — NLB
சீட்டிழுப்பு திகதி 30-06-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2464
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 28 30 37 46
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/06/30
சீட்டிழுப்பு இலக்கம் 4170
ஆங்கில எழுத்து L — வெல்லப்படும் இலக்கங்கள் 5 1 5 2 3 9
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 30/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0682
லக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 21 26 38 72

மெகா பவர்
திகதி 30/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 539
வெற்றி எழுத்து N — சுப்பர் இலக்கம் 17 — வெற்றி இலக்கங்கள் 02 18 26 31

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2847 — வர்ணம் சிவப்பு — திகதி 30.06.2020
வெற்றி இலக்கங்கள் 23 24 42 52 — இடபம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.3,830,332
தொ. பே.: 0112 333 546/47 — Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1668 — சீட்டிழுப்பு திகதி 30/06/2020
வெற்றி இலக்கங்கள் 07 18 29 63 — ஆங்கில எழுத்து R
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 49,919,228
தொ. பே.: 0112 333 546/47 — Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 966 — வர்ணம் : இளநீலம் — சீட்டிழுப்பு திகதி: 2020.06.30
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,443,890/-
வெற்றி இலக்கங்கள் 21 27 46 76 — ஆங்கில எழுத்து I

B 28 36 51 79
சீட்டிழுப்பு வாரம் 592 — திகதி 30.06 2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,056,000
தொ.பே: 0112 333 546/47 — Web: www.dlb.lk

# இணைந்த கணிதம்

**A/L 2021, 2022**
வகுப்புக்கள்

ஆரம்பம் 01.07.2020
புதன் மாலை 4.30 மணி (3153)

இடம் : 442, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

**Tel : 077 314 4866**


# மண்டைதீவு தில்லேஸ்வரத்தில் சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ்வரத்தில் வீற்றிருக்கும் சிவகாமவல்லி அம்பிகை சமேத ஸ்ரீமத் தில்லேஸ்வரப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நாளை வியாழக்கிழமை சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது.

சங்காபிஷேகத்தை சிவஸ்ரீ த.சிவதர்சன் குருக்கள் நடத்தி வைப்பார்.(ம-3)


## கண்ணீர் அஞ்சலி





எமது கல்லூரி ஆசிரியை
திருமதி. பிரியதர்ஷினி தேவகிருபன்
அவர்களின் அன்புத் தாயார்

அமரர்
**டெய்ஷியெயமலர் சின்னையா**

கடந்த 10.06.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-9804)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



## மீண்டும்





வெளிநாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-9775)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**





இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536



## விற்பனைக்குண்டு

ஜமுனாபாறி கிடாயும்
ஜே.சி. நல்லின கன்றுத்தாச்சி மாடும்
விற்பனைக்குண்டு.

(3156) Tel : 021 225 1380
077 803 1427



## O/L DAY CLASS
(பகல் நேர வகுப்பு)

ஆரம்பம்
03.07.2020 வெள்ளி
காலை 8.00 - 2.00 வரை

யாழ். நகரின் கல்வி நிறுவனம் No.1 (C-9802)


- ஒவ்வொரு பிரிவிலும் 40 மாணவர்கள் அனுமதி.
- பாடத்திட்டம் முழுமையாக்கப்படும்.

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 077 459 8440



## கண்ணீர் அஞ்சலி




எமது கல்லூரி ஆசிரியை
திருமதி. மீரா செல்வரூபன் அவர்களின்
மாமனார்

அமரர்
**கந்தையா கிருஷ்ணன்**

அவர்கள் கடந்த 15.06.2020 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-9803)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
**இரத்தினசாமி** அவர்கள் (3134)
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை
மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில்
பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில்
தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும்.

முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்).



வலம்புரி
விளம்பரங்களுக்கு
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 05ம் திகதி வரை





## இந்தியன் செலக்ஷனின்

ஆடி மாத விஷேட தள்ளுபடி...

திருமணப் பட்டுச் சாறிகள்,
கொட்டுன் சாறிகள்,
வைபவங்களுக்கான சாறிகள்,
கவுண் வகைகள்,
சல்வார்கள், சல்வார் துணிகள்,
டொப் வகைகள்
மற்றும் ஏராளமான
ஆடைத்தெரிவுகளை விஷேட
விலைக் கழிவில்
பெற்றுக் கொள்ளலாம்.

20.06.2020 தொடக்கம் 05.07.2020 வரை
இடம் - வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம். (C-9801)

குறிப்பு :- ஆடைகளைக் கொள்வனவு செய்ய வரும்
வாடிக்கையாளர்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றவும்...



## கணிதபாட வகுப்பு

தரம் 6-10 வரையான மாணவர்களுக்கு
கணித பாடம், தேசிய பாடசாலை ஆசிரியரினால்
வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். (3157)

பாடத்தில் பின்தங்கியவர்களுக்கு
விஷேட கவனம் செலுத்தப்படும்.

**077 033 1156**



## விரைவு பொதிகள் சேவை
**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
- நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
- புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
- மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9624)
0768226240





## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்
மஹா கும்பாபிஷேக தின விழா - 2020

காரைநகர் பலகாடு ( இராஜபுரம் ) சப்த கன்னிகள் எனவும் நாச்சிமார் கோயில் எனவும் அழைக்கப்படும் திருவருள் சக்திமிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக தின விழா நவோத்திர சகஸ்ர ( 1008 ) சங்காபிஷேக விஞ்ஞாபனம் சார்வரி வருடம் 2020, 02.07.2020 வியாழன் ( அனுச நட்சத்திரம் ) காலை 07 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் விஷேட பூஜை நடைபெறும். மாலை 04 மணிக்கு வசந்த மண்டப பூஜை ஆரம்பமாகி திருவூஞ்சல் நடைபெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலாவந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

(C-9798)

பலகாடு ( இராஜபுரம் ) காரைநகர். | 077 722 5310 S. கணேசமூர்த்தி. | இங்ஙனம் ஆலய தர்மகர்த்தாவும் பரிபாலன சபையினரும்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.